# அரசு ஊழியர்

ஜனவரி 2020

மலர் : 41 இதழ் : 1

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : ஆ.செல்வம்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, மொ.ஞானத்தம்பி, மு.பாஸ்கரன்,
இரா.ந.நம்பிராஜன், தெ.வாசுகி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ், 19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு, எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 100 தனி இதழ் ரூ. 10*



## சூடா ஒரு கோப்பை சூப்

### எது பெரிது?

என்மொழி, என்னினம்,
என்நாடு நலிகையில்
எதனையும் பெரிதென
எண்ண மாட்டேன் - வேறு
எவரையும் புகழ்ந்துரை
சொல்ல மாட்டேன் - வரும்
புன்மொழி, பழியுரை
துன்பங்கள் யாவையும்
பொருட்டென மதித்துளம்
கொள்ள மாட்டேன் - இந்த(ப்)
*பூட்கையில் ஓரடி
தள்ள மாட்டேன்.

**- பாவலரேறு பெருஞ்சித்திரனார்.**

(*பூட்கை = கொள்கை)



தலைவர் மடல்

## வேற்றுமையில் ஒற்றுமை காணும் இந்திய இறையாண்மையை தூக்கிப் பிடிக்க சபதமேற்போம்!

நாடே தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தபோது நீரோ மன்னன் வயலின் வாசித்துக் கொண்டிருந்தானாம். தற்போது ஆளும் பாஜக அரசோ நீரோ மன்னனை மிஞ்சி விட்டது. அது இந்திய நாடே தீப்பற்றி எரியும் நிலையில் வயலின் வாசித்துக் கொண்டே எரியும் தீயில் இந்துத்துவா யாகம் நடத்துகிறது. கேட்டால் நாடு தீப்பற்றி எரிவதெல்லாம் பொய் அந்தப் புகை மண்டலம் யாகத்தீயில் இருந்து வருகிறது என்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு, வேளாண் நெருக்கடி மற்றும் மீண்டெழ முடியாத அளவிற்கு பொருளாதார வீழ்ச்சி என பல துறைகளி லும் நாடு ஊசலாடும் நிலையில், அதைப்பற்றி கிஞ்சித்தும் இவர்கள் கவலைப்படவில்லை என்ப தோடு இந்து ராஷ்டிராவை நிறுவுவதற்காக குடியுரிமைத் திருத்த சட்டம் மற்றும் தேசிய குடிமக்கள் பதிவேடு ஆகிய நாசகாரச் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் முனைப்பு காட்டிவருவது மக்களை இன்னும் கோபப்படுத்தியுள்ளது. மக்கள் வீதிகளில் இறங்கி போராடும் கோஷங்கள் செவிப் பறைகளை கிழிக்கும் மட்டும் கேட்கும் நிலையிலும் மோடி அரசாங்கம் அதைப்பற்றியெல்லாம் கவலைப் படாமல் மக்களின் குடியுரிமை பற்றிய ஆவணங்களை சரிபார்க்கவும், குடிமக்கள் பதிவேடு தயாரிக்கவும் நிதி ஒதுக்கீடு செய்து அடுத்த கட்ட நகர்வை மேற் கொண்டுள்ளது. இது நாட்டு மக்களிடையே மிகுந்த அருவெறுப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தக் குடியுரிமைத் திருத்தச் சட்டம் மற்றும் குடிமக்கள் பதிவேடு ஆகியவற்றுக்கு பெரும்பாலான அரசியல் கட்சித் தலைவர்கள், ஓய்வுபெற்ற நீதிபதிகள், ஐஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகள், வரலாற்று ஆய்வாளர்கள், திரைக்கலைஞர்கள், எழுத்தாளர்கள், மாணவர்கள், தொழிற்சங்கத்தினர் என அனைத்துத் தரப்பினரும் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர். கல்வி, உள்கட்டமைப்பு, தொழில்நுட்பம் ஆகிய வற்றில் சிறந்து விளங்குவதற்கான தடைகளை நீக்கி வெளிப்படைத் தன்மையை உண்டாக்கி இந்தியாவை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்வார் மோடி என்று நம்பி வாக்களித்தவர்கள் இன்று பாஜக அரசு, ஆர்.எஸ்.எஸ்.அமைப்பின் செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதைக் கண்டு அதிர்ச்சியில் உறைந்திருக்கிறார்கள்.

குடியுரிமை திருத்தச் சட்டத்தின் விளைவு என்னவாக இருக்கும் என்பதற்கு முன்னோட்டமாக அசாமில் தற்போதே 19 லட்சம் பேர் நாடற்றவர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அந்நியர்கள் என்று அறிவிக்கப்பட்டு அவர்கள் தங்குவதற்கான

முகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த சட்டம் நாடு முழுவதிலும் நடைமுறைக்கு வரும் போது பல லட்சம் பேர் நாடற்றவர்களாக அறிவிக்கப் பட்டு முகாம்களில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக் கான அனைத்து உரிமைகளும் மறுக்கப்பட்டு முடக்கப்படுவார்கள். இவர்களை எந்த நாட்டிற்கும் திருப்பி அனுப்புவது சாத்தியமல்ல. முன்னாள் குடியரசுத் தலைவராக இருந்த பக்ருதீன் அலி அகமது அவர்களின் வாரிசுகளே தற்போது குடியுரிமை அற்றவர்களாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் சாதாரண முஸ்லிம்களின் நிலைமை என்ன என்பது கற்பனைக்கப்பாற்பட்ட கொடூரமாகும்.

இந்த சட்டத்தை கொண்டு வருவதற்கு முன்னர் மத்திய அரசு ‘சட்டவிரோத நடவடிக்கைகள் தடை சட்ட’த்தில் சில திருத்தங்களை மேற்கொண்டது. அப்போது பலரும் இந்த சட்டத்திருத்தம் சட்ட விரோத செயல்களில் ஈடுபடுவோர் மீதும், இந்தியாவில் சட்டத்தை மீறும் அந்நிய நாட்டு பயங்கரவாதிகள் மீதும் பிரயோகிக்கப்படும் என்று நினைத்திருந்தனர். தற்போது குடியுரிமைத் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதை எதிர்த்து அனைத்துத் தரப்பினரும் எதிர்வினையாற்றி வரும் நிலையில் இந்தச் சட்டம் இதை எதிர்த்துப் போராடுபவர்கள், பிரதமர் மற்றும் உள்துறை அமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்களை கடுமையாக விமர்சிக்கும் நபர்கள் மீது ஏவப்படக்கூடும் என்று தெரியவருகிறது. இந்த சட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தத்தின் படி மத்திய உள்துறை அமைச்சர் எவர் ஒருவரையும் பயங்கரவாதி என அறிவிக்க முடியும். அப்படி அறிவிக்கப்படுபவரின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும். அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் எவரையும் பயங்கரவாதிகள் என்று அரசு தன்னிச்சை யாக அறிவித்திட முடியும். தன்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு பொய்யானது என்பதற்கான ஆதாரங்களை குற்றம் சாட்டப்பட்ட நபரே நிரூபிக்க வேண்டும். இத்தகைய சட்டத் திருத்தம் குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி என்பதை நிரூபிக்க வேண்டிய அரசியல் சாசன நடைமுறைக்கும், நீதிபரிபாலன கோட்பாட்டிற்கும் தலைகீழானதாகும். இதை மிகப்பெரிய அளவில் மக்களை துன்புறுத்து வதற்கும், பழி வாங்குவதற்கும் மத்திய அரசு பயன்படுத்தலாம். எழுத்தாளர் அருந்ததிராய் பிரதமர் மற்றும் உள்துறை அமைச்சரை கடுமையாக விமர்சித்து பேசியதற்காக அவர் மீது காவல் நிலையத் தில் புகார் அளிக்கப்பட்டுள்ளதும், குடியுரிமை சட்டத் திருத்தத்திற்கு எதிராக கேரளாவில் நடைபெற்ற போராட்டங்களை தன்னுடைய முகநூலில் பதிவிட்ட நார்வே நாட்டு சுற்றுலாப் பயணியை நாட்டைவிட்டு வெளியேற மத்திய அரசு உத்தரவிட்டுள்ளதும் விமர்சனங்களை தாங்கிக் கொள்ளமுடியாத அதன் கொடுங்கோன்மையை வெளிப்படுத்தியுள்ளன.

இந்தக் குடியுரிமை திருத்தச் சட்டம் மற்றும் குடிமக்கள் பதிவேட்டின்படி நீங்களோ, நானோ கூட குடியுரிமை அற்றவனாக ஆக்கப்படலாம். நாட்டு மக்கள் எல்லோரிடமும் குடியுரிமைக்கான ஆவணங்கள் அனைத்தும் இருக்கும் என்று எதிர் பார்க்க முடியாது. அதைத் தட்டிக் கேட்பவர்களையும் அவர்களுக்கு ஆதரவாக குரல் கொடுப்பவர்களையும் சட்ட விரோத நடவடிக்கைகள் தடை சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கலாம். சட்டத்தை எதிர்ப்பவர்கள் எவரையும் எந்தவித முகாந்திரமும் இன்றி ‘பயங்கர வாதி’களாக அறிவிக்க அரசால் முடியும் என்ற நிலையில், எதிர்த்து நிற்பவர்கள் எவரும் அடித்து நொறுக்கப்படுவார்கள் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

எனவேதான், இந்திய தேசம் இன்று தீப்பற்றி எரிய ஆரம்பித்துள்ளது. இந்தப் படுபாதக பயங்கரவாதச் சட்டங்களை எதிர்த்தும், திரும்பப்பெறக் கோரியும் சாதி, மதம், இனம் கடந்து நாட்டு மக்கள் இன்று தெரு வீதிகளில் இறங்கி போராடிக் கொண்டிருக்கும் நிலையில் அரசு ஊழியர்களாகிய நம்முடைய பங்களிப்பும் ஒட்டுமொத்த போராட்டங்களில் ஓங்கி யொலிக்கும் குரலாக எப்போதும் போல் இப்போதும் இருக்கும் என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து கடமையாற்ற வேண்டிய நேரம் இது.

நாடு முழுவதிலும் நடைபெற்றுவரும் இந்தப் போராட்டங்களில் மாணவர்கள் மற்றும் இளைஞர் களின் பங்களிப்பு மகத்தானதாகும். குடியுரிமை திருத்தச் சட்டம் மற்றும் குடிமக்கள் பதிவேடு இவற்றை எதிர்த்து நடத்தப்பட்ட ஒரு போராட்டத்தில் ஒரு மாணவர் ஏந்தி நின்ற பதாகையின் வாசகங்கள் விபரீதம் புரியாமல் வீட்டில் அடைந்து கிடக்கும் ஒவ்வொரு இந்தியனையும் தட்டி எழுப்பி போராட்ட களத்திற்கு வரவழைப்பதாக உள்ளது.

**“இந்த கேடுகெட்ட சட்டத்தை நீ ஏன் எதிர்க்க வில்லை என எனது குழந்தைகள் கேள்வி கேட்கும் ஒரு எதிர்காலத்தில் என்னால் நுழைய முடியாது’’**

என்ற அந்த வாசகம் எத்தனை நிதர்சனமானது. இன்னொரு போராட்டத்தில் ஜெர்மானியர் ஒருவர் ஏந்தியிருந்த பதாகை எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்தது.

**“நான் ஜெர்மானியன். இன்று நீங்கள் இங்கில்லை என்றால் நாளை உங்களது பேரக் குழந்தைகள் உங்களை கேள்வி கேட்பார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்’’**

இந்த வாசகங்கள் நமக்கும் பொருந்தும். இந்தியாவில் ஒரே மதம்தான் இருக்க வேண்டும் என்ற ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்தை நடைமுறைப்படுத்தத் துடிக்கும் மதவாத ஆட்சியாளர்களையும் அவர்கள் நடைமுறைப்படுத்தியுள்ள நாசகாரச் சட்டங்களையும் அப்புறப்படுத்த இந்தியத் தெருக்களில் நடைபெறும் போராட்டங்களில் அரசு ஊழியர்களாகிய நாமும் பங்கேற்று வேற்றுமையில் ஒற்றுமை காணும் இந்திய இறையாண்மையை தூக்கிப் பிடிக்க சபதமேற்போம். ❑

# சவால்களை எதிர்கொள்ளத் தயாராவோம் இப்புத்தாண்டில்!

துணிந்து நீச்சல்
அடிப்பவர்கள் வெற்றி
பெறுகிறார்கள்
எதிர்நீச்சல் போடுபவர்கள்
சரித்திரம் படைக்கிறார்கள்

இப்புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துக்களுடன் மேற்கண்ட வரிகளுக்கு ஏற்ப 2020ஆம் ஆண்டின் கடமைகளை ஆற்ற தோழமையுடன் நமது சங்கம் அழைக்கிறது.

2019ஆம் ஆண்டினை திரும்பிப் பார்க்கும்போது நாட்டின் நிலைமையில் பிற்போக்கு சக்திகளின் ஆட்டங்கள் அதிகரித்துள்ளன என்பது தெரியவருகிறது. நமது நாட்டின் ஏழை எளிய மக்கள், உழைப்பாளி மக்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள் என பல தரப்பினரும் கடுமையான தாக்குதல்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

குறிப்பாக பொருளாதார ரீதியாக 2016ஆம் ஆண்டு இறுதியில் ரூபாய் நோட்டுகள் செல்லாது என்ற அறிவிப்பு இன்றைக்கு ஜி.எஸ்.டி. வரி விதிப்பு, 2019 வாகன திருத்தச் சட்டம் போன்ற அறிவிப்பு அதிலும் குறிப்பாக நடுத்தர வர்க்கத்தினரை கடுமையாக பாதித்து மக்கள் மீது மேலும் மேலும் சுமைகளை ஏற்றியிருப்பதுடன் வர்த்தகர்களையும், உழைப்பாளி மக்களையும் கடுமையாக பாதித்திருக்கிறது.


இன்று மத்திய பாஜக சர்க்கார் பாராளுமன்றத்தில் பல்வேறு சட்டங்களை நிறைவேற்றி இருக்கிறது. குறிப்பாக ஜம்மு-காஷ்மீர் 370 ஷரத்து ரத்து, முத்தலாக் சட்டம், ஒரே நாடு ஒரே தேசம் ஒரே தேர்தல் ஒரே தளபதி ஒரே அதிபர் ஒரே ரேசன் கார்டு, அதேபோல் இந்திய தேசம் முழுவதும் தீப்பற்றி எரிந்து கொண்டு இருக்கக்கூடிய குடியுரிமை திருத்தச் சட்டம் இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிரானது என்று தெரிந்தும் மத்திய பாஜக சர்க்கார் அமுல்படுத்தியுள்ளது.

இந்திய தேசத்தின் பொருளாதாரம் ஒரு முட்டுச் சந்தில் நிற்கிறது என்றும் அது ICU-வில் இருக்கிறது என்றும் பொருளாதார நிபுணர் அரவிந்த் சுப்பிரமணியன் கூறுகிறார். அதேபோல் இந்திய மக்கள் வாங்கும் சக்தியை இழந்து உள்ளார்கள் என நிதி ஆயோக் தலைவர் ராஜீவ்குமார் கூறுகிறார். உதாரணமாக 5 ரூபாய்க்கு கூட பிஸ்கட் வாங்க முடியாத நிலையில் மக்கள் உள்ளார்கள், உள்ளாடைகள் ஜட்டி விற்பனை கூட குறைந்து உள்ளது என பொருளாதார நிபுணர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள்.

கடந்த 10 ஆண்டுகளில் விவசாயிகள் மூன்றரை லட்சம் பேர் இறந்துள்ளார்கள். விவசாய நெருக்கடியின் தாக்கமும், உணரப்பட்டிருக்கிறது. பல்வேறு துறைகளில் 45 ஆண்டுகள் இல்லாத வேலையிழப்பு நடந்துள்ளது, கல்வி, சுகாதாரம், வேலை வாய்ப்பு போன்ற துறைகளில் கடுமையான பின்னடைவு (உதாரணமாக படித்த இளைஞர்கள் 100 நாள் வேலை திட்டத்திற்கு செல்கிறார்கள்) ஏற்பட்டுள்ளது.

மக்களின் வாழ்வாதாரங்களின் மீதும், தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் ஜனநாயக உரிமைகள் மீதும் கடும் தாக்குதல்கள் தொடுக்கப்பட்டுள்ளது. கலாச்சாரம், பண்பாடு, அரசியல், சமூகம் ஆகியவற்றின் அடிப்படை கட்டுமானங்கள் மீது வெறித்தனமான தாக்குதல்கள் மத்திய, மாநில சர்க்காரால் தொடுக்கப்பட்டுள்ளன. தொழிற் சங்கங்களின் உரிமைகள் மீதும் தொழிலாளிகளின் உரிமைகள் மீதும் ஆட்சியாளர்களை தாண்டி நீதிமன்றங்களின் தலையீடும் வரம்புகள் மீறியவையாக உள்ளன.

தமிழ்நாட்டில் நமது ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டம், வேலைநிறுத்தம் ஆகியவற்றுக்கு எச்சரிக்கை விடுக்கும்வண்ணம் ஆட்சியாளர்களின் நடவடிக்கையும், நீதிமன்றங்களின் வரம்பு மீறல் மற்றும் நமது ஒன்றுபட்ட ஜாக்டோ-ஜியோ போராட்டம், சத்துணவு ஊழியர் போராட்டம், MRB செவிலியர்கள் போராட்டம், அங்கன்வாடி ஊழியர் போராட்டம், வருவாய் கிராம உதவியாளர் போராட்டம், போக்குவரத்து தொழிலாளர்கள் போராட்டங்களை கணிசமாக பார்க்க முடிந்தது. இதனை மீறி கடந்த 2017ல் தலைமைச் செயலாளரை நீதிமன்ற படிக்கட்டுகளில் ஏற்றி நமது வெற்றி நிலை நாட்டப்பட்டுள்ளது.




இருப்பினும் அரசின் அடக்குமுறையை மீறி

இந்தியத் திருநாட்டில் இதுவரை இல்லாத வகையில் 200க்கும் மேற்பட்ட அமைப்புகள் ஒன்றிணைந்து ஜாக்டோ-ஜியோ என்ற பேரமைப்பு உருவாக்கி வீரம் செறிந்த காலவரையற்ற வேலை நிறுத்தத்தை 22.1.2019 முதல் நடத்தினோம். அரசின் காவல் துறையால் லட்சக்கணக்கான அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் கைது செய்து சிறையில் அடைக்கப் பட்டார்கள். ஆனாலும் போராட்டம் தீவிரமடைந்தது. போராட்டத்தின் உச்சத்தில் அரசின் நயவஞ்சக நடவடிக்கைகளால் போராட்டத்தின் வீச்சை குறைப்பதற்கும், பணிபுரியக்கூடிய இடங்களை காலிப் பணியிடமாக அறிவித்தது, குற்றக் குறிப்பாணைகள் வழங்கப்பட்டது இருப்பினும் போராட்டம் தொடர்ந்தது. அப்பொழுதுதான் மாண்புமிகு தமிழக முதல்வர் பத்திரிகை செய்தியின் மூலம் போராட்டத்தை கைவிட்டு வேலைக்கு திரும்புங்கள் என்றும், உங்கள் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்றார். முதல்வரின் வேண்டுகோளை ஏற்று நல்லெண்ணத்தின் அடிப்படையில் காலவரையற்ற வேலை நிறுத்தத்தை தற்காலிகமாக ஒத்தி வைப்பது என ஜாக்டோ-ஜியோ முடிவு செய்தது.

இருப்பினும் அரசின் போக்கில் மாற்றம் இல்லை. அரசு ஊழியர், ஆசிரியர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை, குற்றக் குறிப்பாணை, மாறுதல், தற்காலிக பணிநீக்கம் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதன்பிறகு பல போராட்டங்கள் நடத்தினோம். அதனைத் தொடர்ந்து அமைச்சர் பெருமக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. முதலமைச்சர் கவனத்திற்கு கொண்டு சென்று உங்களது கோரிக்கைகள் தீர்க்கப்படும் என்று உத்தரவாதம் அளிக்கப்பட்டது. ஆனால் கோரிக்கைகள் மீது தீர்வு காணப்படவில்லை. 1988, 2002, 2003, 2016, 2017 போராட்டங்களை நினைவில் கொண்டு மீண்டும் பீனிக்ஸ் பறவை போல் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல இந்தப் புத்தாண்டில் சபதம் ஏற்போம்.

இவையனைத்தும் நமக்கு 2019ஆம் ஆண்டிற்கான எச்சரிக்கைகள் என பார்க்கப்படுகிறது. நாட்டிலுள்ள நிலைமைகள் ஆட்சியாளர்களுக்கு எதிராகவும் ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பதற்காகவும் விரிவான அளவில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இன்னும் பிற பகுதி தொழிலாளர்கள் அத்துடன் மக்கள் ஒற்றுமையை கட்டி எழுப்ப வேண்டியதன் அவசியத்தை நமக்கு உணர்த்தியிருக்கிறது. உக்கிரமான முறையில் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துகின்றன.

இன்னும் வஞ்சிக்கப்பட்ட சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் மூன்றரை லட்சம் ஊழியர்களின் பிரச்சனைகள் தீர்க்கப்படவில்லை. 21 மாத நிலுவைத் தொகை மறுக்கப்பட்டுள்ளது. புதிய ஓய்வூதியத் திட்டம் ரத்து செய்யப்படவில்லை, ஊதிய முரண்பாடுகள் களையப்படவில்லை, குறைந்தபட்ச ஊதியமும் ஓய்வூதியமும் மறுக்கப்பட்டுள்ளது. ஜனநாயக ரீதியான போராட்டங்களுக்கு கடுமை யான தடை விதிக்கப்படுகிறது. பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டிய நீதிமன்றங்கள் வரம்பு மீறி உரிமைகளை தடுப்பதற்கு முயற்சித்து வருகிறது. இன்னும் ஏராளமான சவால்கள் காத்திருக்கிறது.

இத்தகைய தாக்குதல்களுக்கு எதிராக ஒன்றுபட்ட போராட்டங்கள் மற்றும் இயக்கங்களின் மூலமாகத்தான் அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களின் வாழ்வில் ஒளிமயமான காலத்தை உருவாக்க முடியும், உரிமைகளை பாதுகாக்க முடியும்.

எனவே, அரசு ஊழியர்களிடம் விரிவான பிரச்சாரம் மற்றும் ஒற்றுமையை வளர்ப்பது, ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பை தொடர்ந்து முன்னெடுப்பது, புதிய ஓய்வூதியம் எனும் அரக்கனை ஒழிப்பது, ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பது உள்ளிட்ட நமக்கான ஸ்தாபன கடமைகளை நிறைவேற்றுவதும் 2020ஆம் ஆண்டு மேற்கொள்ள வேண்டிய கடமையாகும்.

மேலும் இரண்டாவது சுதந்திரப் போராட்டமான ஜனவரி 8, 2020-ல் இந்திய தேசம் முழுவதும் நடைபெற்ற அகில இந்திய வேலை நிறுத்தப் போராட்டத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கமும், அனைத்துத் துறை சங்கங்களின் போராட்டக் குழுவும் பங்கேற்று இந்தத் தேசத்தை பாதுகாக்கக் கூடிய வேலைநிறுத்தத்தில் முழுமையாக பங்கேற்று ஆட்சியாளர்களை அச்சப்பட வைத்துள்ளது. இதுபோன்ற பல போராட்டங்களை நமக்கான உரிமைகளை நாம் பெறும் வரை ஓயாமல் கையிலெடுக்க வேண்டிய அவசியம் உள்ளது.

காலங்கள் மாறினாலும் ஆட்சிகள்
மாறினாலும் ஆள்வோரின் தயவினால்
அல்ல உரிமைகள் பெற்றது!
ஞாலம் முழுவதும் உரிமைகள் காக்கவும்
மீட்கவும், ஊழியர் பூண வேண்டியது
போர்க்கோலமே! என்பது
இன்றைய ஆட்சியாளர்களிடமும்
வெளிக்காட்ட வேண்டியுள்ளது

எனவே இழப்புகளை மீட்டிட அடக்குமுறை அச்சுறுத்தலை வேரறுக்க கோரிக்கைகளை வென்றெடுக்க போராட்ட இயக்கங்களை முன்னெடுத்துச் செல்வோம் என இப்புத்தாண்டில் சபதமேற்போம். ❑

# புதிய ஓய்வூதியத் திட்டத்தை எதிர்ப்பது ஏன்?

*1.4.2003* அன்றுக்குப் பிறகு தமிழக அரசுப் பணியில் சேர்ந்த அரசு ஊழியர்களுக்குப் பழைய ஓய்வூதியத் திட்டம் (Defined pension scheme) இல்லை என்றும், அதற்குப் பதிலாக பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் சேர்க்கப்படுவார்கள் என்று அறிவித்து, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

## பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் என்றால் என்ன?

ஓர் அரசு ஊழியர் பெறும் ஊதியத்தில் பத்து சதவிகிதத் தொகை பிடித்தம் செய்யப்படும். அத்துடன், அதற்கு இணையாக பத்து சதவிகிதத் தொகை அரசு வழங்கும். இதற்குத் தனியாக கணக்கு பராமரிக்கப்படும். இந்தத் தொகைக்கு வட்டியாக தற்பொழுது ஆண்டுக்கு 8.7 % சேர்க்கப்படுகிறது.

மாநில அரசுகள் தங்கள் ஊழியர்களிடம் பிடித்தம் செய்யும் தொகையை மத்திய அரசின் ஓய்வூதிய நிதி ஒழுங்காற்று மற்றும் மேம்பாட்டு ஆணையம் [Pension Fund Regularity and Development Authority (PFRDA)]இல் செலுத்த வேண்டும்.

ஓய்வூதிய நிதி ஒழுங்காற்று மற்றும் மேம்பாட்டு ஆணையம் இந்தத் தொகையை கையாள புதிய ஓய்வூதியத்திட்ட நிதியை நிர்வகிக்கும் நிதி மேலாளர்கள் (Pension fund managers) என்னும் ஒரு குழு அமைத்திருக்கிறது. இந்தக் குழு அரசு ஊழியரின் பணத்தை LIC, UTI முதலான நிதி நிறுவனங்களில் முதலீடு செய்யும்.

அரசு ஊழியர்களின் பங்களிப்பு ஓய்வூதியக் கணக்கில் அரசு ஊழியர் பணம் எவ்வளவு இருக்கிறது என்று அரசு ஊழியர் பங்களிப்பு ஓய்வூதியக் கணக்கு அறிக்கை (CPS account statement)இல் எப்பொழுது வேண்டுமென்றாலும் பாரத்துக்கொள்ளாம்.

அரசு ஊழியர் ஓய்வு பெறும் போது, அவரது பங்களிப்பு ஓய்வூதியத் திட்டக் கணக்கில் உள்ள பணத்தில் 60 சதவிகித பணம் ரொக்கமாகக் கொடுக்கப்படும். மீதி 40 சதவிகித பணம் LIC, UTI முதலான நிறுவனங்களிடம் முதலீடு செய்யப்படும். அந்நிறுவனங்கள் அந்த பணத்தை பங்குச் சந்தையில் முதலீடு செய்து, அதிலிருந்து வரும் வருமானம் அரசு ஊழியருக்கு வழங்கப்படும்.

## சரி, ஓய்வு பெறும் முன்பே, விருப்ப ஓய்வு பெறுபவர்களுக்கு என்ன கிடைக்கும்?

அவரது, பங்களிப்பு ஓய்வூதியக் கணக்கு அறிக்கையில் இருக்கும் பணத்தில் 20 சதவிகிதத் தொகை ரொக்கமாகக் கொடுக்கப்படும். மீதி 80 சதவிகிதத் தொகையை மேற்படி கூறியது போலப் பங்கு சந்தையில் முதலீடு செய்து, வரும் லாபம் கொடுக்கப்படும். இதுதான் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்.

## பிறகு ஏன் இந்தத் திட்டத்தை அரசு ஊழியர்கள் எதிர்க்கிறார்கள்?

மாநில அரசுகள் தங்கள் ஊழியர்களிடம் பிடித்தம் செய்யும் தொகையை மத்திய அரசின் ஓய்வூதிய நிதி ஒழுங்காற்று மற்றும் மேம்பட்டு ஆணையத்தில் செலுத்த வேண்டும்.

ஆனால், தமிழக அரசு இந்தத் தொகையை இன்றுவரை செலுத்தவில்லை என்று ஓய்வூதிய நிதி ஒழுங்காற்று மற்றும் மேம்பட்டு ஆணையத்திடம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் கோரப்பட்டதில் தெரியவந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. தமிழக அரசு இந்த நிதியை நலத்திட்டங்களுக்குப் பயன்படுத்திக்கொண்டதாகச் சொல்லப்படுகிறது.

மேலும், அரசு ஊழியர்களின் பணத்தைப் பங்குச் சந்தையில் முதலீடு செய்வதை அரசு ஊழியர்கள் எதிர்ப்பதற்குக் காரணம், பங்குச் சந்தையில் முதலீடு செய்வதால் நிலையான வருமானம் வரும் என்கின்ற உத்தரவாதம் இல்லை என்பதும், பல நேரங்களில் போட்ட முதலே படிப்படியாகக் குறைந்துவிடுவதும் உண்டு என்பதால்தான்.

எது எப்படி இருந்தாலும், முதலீட்டின் மீது வரும் வருமானம், அரசு ஊழியரின் வைப்புத் தொகையில் 10 சதவிகிதத்திற்கு மேல் இருக்காது. பங்குச் சந்தையில் ஏதேனும் நட்டம் ஏற்பட்டாலோ, நாட்டில் பொருளாதாரா நெருக்கடி வந்தாலோ ஏற்படுகின்ற இழப்பு அரசு ஊழியரைத்தான் சாரும். அரசு எந்த வகையிலும் பொறுப்பு ஏற்காது என்று ஓய்வூதிய நிதி ஒழுங்காற்று மற்றும் மேம்பட்டு ஆணையத்தின் இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசு ஊழியர், “என்னுடைய பணத்திற்கு குறைந்தபட்ச வட்டியாவது கொடுங்கள்” என்று கோர முடியாது. இதுதான் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் உள்ள பிரச்சனை.

சரி, பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் பணிபுரியும் அரசு ஊழியருக்கு மாதம் எவ்வளவு ஓய்வூதியம் கிடைக்கும் என்று பார்ப்போம்?

2007 ஆம் ஆண்டு மூன்றாம் நிலை நூலகராகப் பணியில் சேர்ந்த அரசு ஊழியரின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டக் கணக்கில் இன்று உள்ள மொத்தத் தொகை: ரூ.6,13,824.

அவர் ஓய்வு பெற உள்ள ஜூன் 2023 இல் அவருடைய கணக்கில் இருக்கும் உத்தேசமான தொகை ரூ.10,40,000

அவர் ஓய்வு பெறும் நாளில் அவருக்கு வழங்கப்படும் 60% தொகை ரூ. 6,24,000. அதன்பிறகு அவர் கணக்கில் இருக்கும் 40 % தொகை ரூ.4,16,000.

இந்தத் தொகையை பங்குச் சந்தையில் முதலீடு செய்து அதிலிருந்து வரும் லாபத் தொகையில் அவருக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் என்று அரசு கூறுகிறது. அவருடைய 40% தொகையில் (ரூ.4,16,000) எப்படியும் 10% க்குமேல் லாபம் கிடைக்காது.

இதில் 10% லாபம் என்று வைத்துக்கொண்டால் ஆண்டுக்கு ரூ. 41,600. மாத ஓய்வூதியம் (12 ஆல் வகுத்தால்) ரூ.3,466. ஆக, அவர் ஓய்வு பெறும்போது அவருக்கு அரசு வழங்கும் ஓய்வூதியம் மாதம் ரூ. 3,466 அல்லது அதிகபட்சம் ரூ. 4,000.

1. இந்த நான்காயிரம் ரூபாயில் ஒருவர் குடும்பம் நடத்த முடியுமா?

2. அவர் ஓய்வு பெறும் நாளில் அவருடைய பங்களிப்பு ஓய்வூதியக் கணக்கில் உள்ள தொகையில் 60%, அதாவது ரூ. 6,24,000 அவருக்கு வழங்கப்படும். இந்த பணத்திற்கு வீடு வாங்க முடியுமா? இந்தத் தொகைக்கு 500 சதுர அடி நிலம் கூட வாங்க முடியாதே?

பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்திற்குப் பிடித்த பணத்தில் கடன் பெறும் வசதி இல்லையே?

வட்டி என்பது விலைவாசி உயர்வின் அடிப்படையில் கொடுக்க வேண்டியது. இன்றைக்கு எல்லாப் பொருட்களும் ஆண்டுக்கு 20% என்ற அடிப்படையில் விலை உயர்ந்து வருகிறது. அரசாங்கம் தரும் சொற்ப வட்டிக்காக அரசு ஊழியர் தன்னுடைய பணத்தை யாரிடமோ விட்டுவைப்பது அவருக்கே கேடானது. அவருடைய குழந்தைகளின் கல்விக்காகவும் மருத்துவத்தாகவும் அதிக வட்டிக்கு கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதே.

அரசு ஊழியர் ஓய்வு பெறும்போது அவருக்குக் கொடுக்கப்படும் பணத்தின் மதிப்பு மிகமிக குறைவாக இருக்கும். அவருக்குக் கொடுக்கப்படும் ஓய்வூதியத்தில் வாடகை வீடு கூட கிடைக்காது.

2023 ஆம் ஆண்டு அவருடைய ஓய்வூதியம் ரூ.4000 இருக்கும் போது, முதியோர் உதவித்தொகை ரூ.2000 ஆக இருக்கும். 2030 ஆம் ஆண்டு அவருடைய ஓய்வூதியம் அதே ரூ.4000 தான் இருக்கும்.. ஆனால், அன்றைக்கு முதியோர் உதவித்தொகை ரூ. 5000 ஆக இருக்கும். அரசு ஊழியர்களைவிட முதியோர் உதவித்தொகை (OAP) வாங்குபவர்களே மேல் என்ற நிலை ஏற்பட்டுவிடும்.

இதனால்தான், புதிய பென்ஷன் திட்டம் ஓர் ஏமாற்றுவேலை, வங்கி முதலாளிகளைச் செழிக்க வைக்க நம்மையெல்லாம் பலிகடா ஆக்குகிறார்கள் என்று அரசு ஊழியர்கள் புதிய பென்ஷன் திட்டத்தை எதிர்க்கிறார்கள்.

பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் குறைந்தபட்ச ஓய்வூதியம் என்று எந்தத் தொகையும் நிர்ணயம் செய்யப்படாததுதான் அரசு ஊழியர்களை அச்சப்பட வைக்கிறது. இந்த அச்சத்தைப் போக்க அரசு குறைந்தபட்ச ஓய்வூதியத் தொகையையாவது அறிவிக்க வேண்டும்.

- **நூலகர் சி.சரவணன்**

# இந்திய குடியுரிமைச் சட்டம் (திருத்தம்) என்ன சொல்கிறது?

## அரசியலமைப்புச் சட்டமும், குடியுரிமைச் சட்டமும்

இந்திய அரசியலமைப்புச் சட்டம், குடியுரிமை குறித்து சட்டம் இயற்றுவதற்கு நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் வழங்கியுள்ளது. அதனடிப்படையில் 1955ஆம் ஆண்டு குடியுரிமைச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின்படி குடியுரிமையில் மதரீதியிலான பாகுபாடு எதுவும் கிடையாது. அதே நேரத்தில் இந்திய பாகிஸ்தான் பிரிவினையின் போது இந்தியாவில் குடியேறிய பாகிஸ்தானைச் சேர்ந்த இஸ்லாமியர்களுக்கு குடியுரிமை வழங்கப்பட்டது. ஆக நமது இந்திய அரசியலமைப்புச் சட்டமும், குடியுரிமைச் சட்டம் 1955 ஆம், மதரீதியிலான குடியுரிமை என்பதை நிராகரித்திருக்கிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 14 மதரீதியிலான பாகுபாட்டை நிராகரிப்பதோடு சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் என்பதையும் உத்தரவாதப்படுத்தியுள்ளது.

## குடியுரிமைச் சட்டம் (சீர்திருத்தம்) சட்டமுன்வரைவு சொல்வது என்ன?

குடியுரிமைச் சட்டம் 1955ல் பிரிவுகள் 2(b)(I), 6 (B) (1) (2) (3) (4), 7 (D) (i) (da), 18 (2) (eei) மற்றும் மூன்றாவது அட்டவணையில் Clause (d) ஆகிய பிரிவுகளில் கூடுதல் இணைப்பு மற்றும் சீர்த்திருத்தம் கோருகிறது. அதில் முக்கியமான திருத்தம் என்பது பிரிவு 2(b) (I) சீர்திருத்தப்படி 31.12.2014ம் தேதிக்கு முன்பு " இந்தியப் பிரிவினையின் போது ஒன்றுபட்ட இந்தியாவில் குடியிருந்த பல்வேறு மத நம்பிக்கைகளைக் கொண்ட லட்சக்கணக்கான மக்கள் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய மூன்று நாடுகளிலேயே தங்க நேர்ந்து விட்டது. அந்த மூன்று நாடுகளின் அரசியலமைப்புகளும் தங்களுக்கென்று அரசு மதத்தை அங்கீகரித்துள்ளது. அதனால் அந்த மூன்று நாடுகளில் குடியிருக்கும் இந்துக்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், பார்சிகள் மற்றும் கிறிஸ்தவர்கள் மத ரீதியாக துன்புறுத்தப்படுகிறார்கள் . அதன் விளைவாக அவர்கள் அவரவர் மத நம்பிக்கைகளை பின்பற்ற முடியாமல் பயந்து வாழ்வதோடு அங்கிருந்து வெளியேற நிர்பந்திக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு இந்தியாவில் குடியுரிமை வழங்க வேண்டிய அவசியத்தின் அடிப்படையில் இந்த சட்ட முன்வரைவு கொண்டு வரப்படுகிறது" என்று குடியுரிமை (சீர்திருத்தம்) 2019ன் சட்ட முன்வரைவின் நோக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## எதிர்க்கப்படுவதன் காரணம்

ஆர்.எஸ்.எஸ்.சின் அடிப்படைக் கோட்பாடான இந்து ராஷ்டிரம் என்பதை குடியுரிமைச் சட்ட (திருத்தம்) முன்வரைவின் நோக்கமும், அதன் சீர்திருத்தம் கோரும் சட்டப்பிரிவுகளும் பிரதிபலிக்கின்றன. எனவே ‘இந்து ராஷ்டிரா’ என்பதை சட்டரீதியாக கட்டமைப்பதற்கான முன்னோட்டமே இது. மேலும் இஸ்லாமியர் அல்லாதவர்களுக்கு குறிப்பாக இந்துக்களுக்கு கூடுதல் முக்கியத்துவம் கொடுப்பது என்ற வகையில் இஸ்லாமியர்களை இரண்டாம் தர குடிமக்களாக்க மேற்கொள்ளும் முயற்சி. அதன் மூலம் இஸ்லாமியர்கள் உளவியல் ரீதியாக அச்சுறுத்தப்படுகிறார்கள். ஏற்கனவே காஷ்மீரில் அம்மக்கள் தன்னாட்சி கோரிய நிலையில் அம்மாநிலத்திற்கான சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்து இரண்டாகப் பிரித்துள்ளது மத்திய அரசு, அதோடு அம்மக்கள் தங்களது அடிப்படை சிவில் உரிமைகளுக்குக் கூட போராட முடியாத வகையில் உரிமைகள் மறுக்கப்பட்டு ஆயிரக் கணக்கானோர் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளனர்.

இந்தியப் பிரிவினையின் போது பல்வேறு காரணங்களுக்காக தங்கள் உறவினர்களைப் பிரிந்தும் சொத்துக்களை இழந்தும் பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் பகுதிகளில் தங்கிவிட நேர்ந்த இஸ்லாமியர்களின் நிலை என்ன என்ற கேள்விக்கும், பாகிஸ்தானில் மதரீதியாக துன்புறுத்தப்படும் சிறுபான்மை ‘அகமது’ மற்றும் ‘போரா’ பிரிவு முஸ்லிம்களின் நிலை குறித்தும் அந்த சட்டத்திருத்தம் எதுவும் குறிப்பிடவில்லை. அதே போல் மூன்றாவது அட்டவணை clause(d) என்பது இயல்புரிமை அடிப்படையில்

குடியுரிமை பெறுவதற்கு 12 ஆண்டுகள் தொடர்ச்சியாக இந்தியாவில் குடியிருந்திருக்க வேண்டும் என்பதை மொத்தமாக ஐந்தாண்டுகள் இந்தியாவில் குடியிருந்தால் போதும் என்றும் திருத்தம் கோருகிறது. இது 12 ஆண்டுகள் குடியிருந்திருக்க வேண்டும் என்பதை குறைந் திருப்பதோடு தொடர்ச்சியாக என்பதை மொத்தம் ஐந்தாண்டுகள் என்றும், சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று கோரியிருப்பது அரசின் உள்நோக்கத்தை வெளிக்கொணர்ந்துள்ளது.

மேலும் அந்த சட்ட திருத்த நோக்கத்தின்படி பார்த்தால் ஆப்கானிஸ்தான் இந்தியாவில் இருந்து பிரிந்த நாடு அல்ல. அது நீண்ட நெடுங்காலமாக தனித்த நாடாகவே இருந்து வந்துள்ளது. அதோடு இந்தியாவை ஒட்டிய எல்லையைப் பகிர்ந்து கொள்ளும் நாடுகள் என்றும் சொல்லப்படுகிறது. அப்படிப் பார்த்தாலும் ஆப்கானிஸ்தான் அதில் கிடையாது. ஒருவேளை ஆர்.எஸ்.எஸ்.இன் அகன்ற பாரதம் என்ற கோட்பாட்டில் ஆப்கானிஸ்தான் வருகிறதோ என்னவோ, உள்ளபடியே நம்முடன் எல்லையைப் பகிர்ந்து கொள்ளும் பர்மா, நேபாளம், பூடான் ஆகிய நாடுகள் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். பர்மா திட்டமிட்டு சேர்க்கப்படவில்லை. ஏனெனில் அப்படி பர்மாவையும் இணைத்து விட்டால் அங்கிருந்து அகதிகளாக இந்தியா வந்துள்ள 40,000 ரோஹிங்யா இஸ்லாமிய அகதிகளுக்கும் குடியுரிமை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை வலுவாக எழும் என்பதை தவிர்க்கவே பர்மா இணைக்கப்படவில்லை.

இந்நிலையில் குடியுரிமை (திருத்தம்) சட்டத்தை செயல்படுத்தும் வகையில் தேசிய குடியுரிமை பதிவேட்டை நாடு முழுவதும் விரிவுபடுத்த வேண்டும் என உள்துறை அமைச்சர் அமித்ஷா கூறியுள்ளார். அப்படி தேசிய குடியுரிமை பதிவேட்டில் பதிவு செய்ய போதிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட முடியவில்லை என்ற நிலை ஏற்பட்டால் நாளை நீங்களும் நானும் சொந்த நாட்டில் அகதிகளாக்கப்படலாம்.

- **மு.பாஸ்கரன்**

## புத்தாண்டின் உறுதிமொழி!

கவிகேட்கும் கணவான்களே!
செவிமெடுக்கும் சீமாட்டிகளே!

வரலாற்றின் நிகழ்காலத்தில்
வாழ்ந்து செல்லும்
உங்கள் அனைவரையும்
நான் ஒன்று
கேட்டுக்கொள்கிறேன்;

கடந்தகாலத்தின்
வரலாற்றைப் படைத்த
ஊர்பேர் தெரியாத
தோழர்களின் சகாப்தங்களுக்கு
இந்நாளில் நாம்
முதல்மரியாதை செய்வோம்.

சவப்பெட்டிகளுக்குள்
அடைக்கப்பட்டிருக்கும்...
புதைகுழிகளுக்குள்
புதைக்கப்பட்டிருக்கும்...
எரிதணலுக்குள்
விதைக்கப்பட்டிருக்கும்...
அவர்களின் தியாகங்களை
கொஞ்சம் திரும்பிப் பார்ப்போம்!

சிறைசென்று அவர்கள் பட்ட
சித்திரவதைகளையும்
பூட்ஸ்கால்களில் உதைபட்டு
அவர்களின்
கிழிந்து தொங்கும் சதைகளையும்
இன்றேனும் ஒருநாள்
விழித்திரையில் நிலைநிறுத்தி
வீரவணக்கம் செலுத்துவோம்!

அவர்கள் வெறும்
எண்ணிக்கையல்ல -
அவர்கள் எல்லோருக்கும்
பெயர்கள் இருந்தன;
முகங்கள் இருந்தன;
எதிர்காலத்தின் மீது
அதீத நம்பிக்கைகள் இருந்தன!

நினைவில் நிற்பவர்கள்
பட்ட துயரங்களுக்கு
எந்த விதத்திலும் குறைந்தது அல்ல
பெயர் தெரியாதவர்கள்பட்ட
துன்பங்களும், துயரங்களும்!

அவர்களின் நசுக்கப்பட்ட
குரல்வளைகளிலிருந்து
பீரிட்டெழும்பிய
உரிமை முழக்கங்களின்
எதிரொலிகள் இன்றும்
கேட்டுக்கொண்டேயிருக்கின்றன!

அவர்கள் செய்த தியாகங்கள்
அவர்களுக்கானவையல்ல,
அடுத்த தலைமுறைக்காகவுமல்ல -
யுகம் உள்ள மட்டும்
சமதர்ம சமுதாயம் நிலைக்கவே
அகங்காரம் கொண்டார்கள்
அவர்கள்!

அவர்தம் வியர்வையில் விதைத்து
குருதியில் அறுவடை செய்தவைதாம்
இன்று நாம் சுவாசிக்கும்
சுதந்திரக் காற்றும்,
சுகிக்கும் உரிமைகளும்!

உண்மையில் சொல்லப்போனால்
ஒவ்வொரு புத்தாண்டையும் -
புன்னகைகளுடனும்,
பூக்களுடனும் நாம்
தோரணங்கட்டி கொண்டாடுவதற்கு
அவர்கள்தான் காரணமாய்
இருந்திருக்கிறார்கள்!

கவிகேட்கும் கணவான்களே...
செவிமெடுக்கும் சீமாட்டிகளே...

நமக்காக
பெயர்தெரியாதவர்கள் பட்ட
துன்பங்களுக்கும் துயரங்களுக்கும்
நாம் என்றென்றும்
நன்றிக்கடன் பட்டிருக்கிறோம்!

அவர்களுக்காக நாம்
செய்ய வேண்டியது ஒன்றுதான்,
“குருதி சிந்தி அவர்கள்
பெற்றுத்தந்த உரிமைகளை
இறுதிவரை உறுதியோடு காப்போம்!”
இதையே இப்புத்தாண்டின்
உறுதிமொழியாய் ஏற்போம்!

- ஜிஜி

# வீழ்த்தப்படுவதற்காக உருவாக்கப்பட்டதல்ல இயக்கம்!

### உன்னத லட்சியங்களும், உள்சங்க ஜனநாயகமும்

மாறாத கொள்கைகளாலும், மேலான லட்சியங்களாலும் நமது முன்னோடித் தோழர்களால் உருவாக்கப்பட்ட இந்த இயக்கம் இன்னும் அரசு ஊழியர்களின் உரிமைகளுக்காகவும், நலன்களுக்காகவும் போராட 13ஆம் மாநில மாநாட்டின் மூலம் புதுப்பொலிவோடு தன்னை புனரமைத்துக் கொண்டுள்ளது. ஒன்றுபட்ட கருத்துக்கள் மூலமாகவோ அல்லது தலைமையினால் தகுதித்திறன் கண்டறியப்பட்டு, நிர்வாகிகளாக அறிவிக்கப்படுகிறவர்களை ஏற்றுக்கொண்டு இந்த அமைப்பு இதுநாள்வரை இராணுவக் கட்டுக்கோப்போடு இருந்து வந்துள்ளது. அதே சமயம் சங்கப் பணிகளை இன்னும் தன்னால் செவ்வனே செய்ய முடியும் என்ற கருத்தும், சுறுசுறுப்பும் திறனும் கொண்டவர்களாக தங்களை வரித்துக்கொண்டவர்கள், அமைப்பு அறிவிக்கும் நிர்வாகிகளைவிட தங்களால் செயலாற்ற முடியும் என்ற கருத்து மோதல்களில் ஈடுபட்டு, நிர்வாகி தெரிவுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளவர், அவர் அவ்வாறு பரிந்துரைக்கப்பட்டதற்கான காரணங்கள் விளக்கப்பட்ட பின்பும் அதன்பேரில் திருப்தியுறாமல் தோழமை இல்லாமல் எதிர்த்து நின்றதும் நடந்தது. உள்சங்க ஜனநாயகம் என்ற உள்கட்டமைப்பு பலமாக இருந்ததால் தேர்வு நிலைக்கு மாறாக தேர்தல் நிலை வந்தபோதும் அதை ஆரோக்கியமான நடைமுறையாகவே இச்சங்கம் ஏற்றுக்கொண்டு வாக்களிப்பு மூலமாக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட வழிவகை செய்தது.

### இயக்கத்தின் கம்பீரத்தை இழிவுபடுத்தும் சிறுமைகள்!

ஆனால் எதிர்தரப்பில் நின்று வெற்றிபெற இயலாமல் போனவர்கள் வென்றவர்களை எதிரிகளாக பார்க்கும் போக்கும், தங்களால் வெற்றிபெற இயலவில்லையே என்பதை வெறித்தனமாக மாற்றிக்கொண்டு, இந்த இயக்கத்தையே முடக்கும் அளவுக்கு மூர்க்கத்தனமான செயல்களில் இறங்கியிருப்பதும், வளர்த்த கடா முட்ட வந்த கதையாகியிருக்கிறது. வெற்றி பெறஇயலாமல் போனவர்கள் யாரையும் இந்தச் சங்கம் எதிரிகளாவோ, விரோதிகளாகவோ பார்த்தது கிடையாது. வாட்ஸ்ஆப், பேஸ்புக் போன்ற வலைத்தளங்கள் மூலமாகவும், துண்டுப் பிரசுரங்கள் வாயிலாகவும் இந்த இயக்கத்தையும் அதன் நிர்வாகிகளையும் பொதுவெளிகளில் சிறுமைப்படுத்தும் செயல்களை நம்முடைய இயக்கத்திலேயே சிலபேர் தொடர்ந்து செய்து வருவது நம்முடைய அமைப்பை பலவீனப் படுத்தும் என்று திரும்பத் திரும்ப உணர்த்தியும் அது தவிர்க்கப்படாமல் உள்ளது வருத்தப்பட வேண்டிய விஷயமாகும். சங்கத்தின் நலன் கருதியும் நாம் கொண்டுள்ள கொள்கை மற்றும் லட்சியங்கள் காரணமாகவும் இவற்றையெல்லாம் பெரிதுபடுத்தாமல் ஊழியர்களின் நலன்களுக்காகவும், அவர்களுக்குப் பெற்றுத்தர வேண்டிய உரிமைகளுக்காகவும் சங்கம் தொடர்ந்து போராடி வருகிறது.

முன்னாள் நிர்வாகி தோழர் ச.இ.கண்ணன், திருவண்ணாமலையில் நடந்த நமது சங்கத்தின் 12ஆம் மாநில மாநாட்டில் நிர்வாகிகள் தேர்வின் போது நான் மாநில செயலாளராகவோ, மாநில துணைத் தலைவராகவோ செயல்படமாட்டேன். பொதுச்செயலாளருக்காக தான் போட்டியிட்டே தீருவேன் என்று நின்றதும், அதுவரை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தில் இல்லாத நிகழ்வாக, அவரின் ஜனநாயகபூர்வமான கோரிக்கையை சங்கம் ஏற்று நமது சங்கம் ஒரு தேர்தலை சந்தித்ததும் 2017ல் நடந்தது. இந்த சங்கத்தில் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிர்வாகியாக சங்கம் ஒருவரை அறிவிக்கும் நிலையில் அதை, அவர் மறுதலித்ததும், மூத்த தலைவர்கள், முன்னாள் நிர்வாகிகள் என்று பலரும் அவரை சமாதானப்படுத்தியும் அவர் எவருடைய கருத்தையும் ஏற்றுக்கொள்ளாமல், தான் பொதுச்செயலாளர் பதவிக்கு போட்டியிட்டே தீருவேன் என்று தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளாமல் இருந்ததும், தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற

இயலாமல் போனதும் எல்லோருக்கும் தெரிந்த உண்மைகளே.

**ஜனநாயகத்தின் தீர்ப்பை தலைவணங்கி ஏற்பதுவே இயக்கத்தின் மேன்மை!**

முன்னாள் நிர்வாகி தோழர் ச.இ. கண்ணன் அவர்களின் ஜனநாயகபூர்வமான கோரிக்கையை ஏற்று தேர்தலை நடத்தியதன் மூலம் இந்த அமைப்பு தகுதி உள்ளவர்களையும், திறமை உள்ளவர்களையும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தால் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஜனநாயகச் சித்தாந்தத்தின் பேரில் உள்ள பிடிப்பை அப்போதும் நிலை நிறுத்தியது. ஆனால் ஜனநாயக முறைப்படி நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற முடியாமல் போனவர் அதை அத்தோடு மறந்து தனக்கு வாக்களித்த உறுப்பினர்களுக்கும், வாக்களிக்காத உறுப்பினர்களுக்கும் தான் வெற்றிபெற முடியாமல் போனாலும் தன்னுடைய ஆளுமையையும், தோள்நிற்கும் தோழமையையும் சங்க உறுப்பினர்களுக்கு தன்னுடைய இயக்கச் செயல்கள் மூலம் நிரூபிப்பதற்கு பதிலாக, பெரும்பான்மை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகத்தையும் அதன் நிர்வாகிகளையும் தனிப்பட்ட முறையில் விமர்சித்தும், வசைபாடியும் வாட்ஸ்ஆப் இயக்கம் நடத்தி வந்தார். அவரை பலமுறை பல, முன்னாள் இந்நாள் நிர்வாகிகள் அணுகி சங்கத்திற்கு எதிரான செயல்களில் ஈடுபடுவதை கைவிட்டு சங்க ஒற்றுமையைக் காக்க கேட்டுக்கொண்டும் அதை அவர் மறுதலித்த செயலானது, அவர் இந்த இயக்கத்தின் மேன்மைக்காக தன்னை வரித்துக்கொண்ட நபர் இல்லையோ என்பதையும், பதவி ஆசை ஒன்றே இந்த இயக்கத்தில் தனது லட்சியமாகக் கொண்டிருக்கும் நபரோ என்ற ஆழ்ந்த சந்தேகத்தையும் எழுப்பியது.

**லட்சியங்களை திசை மாற்றப் பார்க்கும் சுயநலங்களும், தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சிகளும்!**

சங்க நிர்வாகிகள் மீதும், சங்க செயல்பாடுகள் மீதும், சங்கத்தின் முடிவுகள் மீதும் தரக்குறைவான விமர்சனங்களை நேரடியாகவும், தன்னுடைய நலன்விரும்பிகள் மூலமாகவும் தொடர்ந்து வெளிப்படுத்தி, அதன்மூலம் தனக்கென ஒரு குழுவை அமைத்துக்கொண்டு, அவர்களை கொம்பு சீவி, பதவி போதை ஏற்றி இயக்கத்தின் நலன்களுக்கு எதிராக கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக இவர் செயல்பட்டு வருகிறார். சங்கத்தின் பொதுச்செயலாளர் மற்றும் நிர்வாகிகள் மீது தனிப்பட்ட விமர்சனங்களையும், வர்க்க பேத விளக்கங்களையும், வசைமாரி பொழிந்து இயக்கத்தின் லட்சிய நோக்கங்களை திசைமாற்றிட முயன்று வருகிறார். ஊழியர்கள் நலன்களில் அக்கறையும், இயக்கத்தின் கொள்கைகளின்பால் பிடிப்பும் கொண்ட நிர்வாகிகள் அவருடைய பேச்சுக்கும் ஏச்சுக்கும் எல்லா இடங்களிலும் எதிர்வினை ஆற்றாமல் தேவைப்பட்ட இடங்களில் மட்டும் அத்தகைய விமர்சனங்கள் எவ்வகையில் நமது சங்கத்தை சீர்குலைக்கும் என்று உறுப்பினர்களுக்கு விளக்கி வந்திருக்கிறார்கள்.

இந்த நிலையில் விருதுநகர் மாவட்டத்தின் நிர்வாகிகளை தன்னுடைய விருப்பத்திற்காக இச்சங்கத்திற்கு எதிராக விமர்சிக்கவும், எதிர்க்கவும் தூண்டுகோலாக அமைந்ததோடு மட்டுமல்லாமல் சங்கத்தின் விதிமுறைகளுக்கு முரணாக விருதுநகர் மாவட்ட நிர்வாகத்தில் தன்னை ஒரு நிர்வாகியாக இணைத்துக்கொண்டும் மாற்றிக் கொண்டும் சங்கவிதிமுறைகளுக்கு மாறாக செயல்பட்டு வந்தார். மாநில மையம் விருதுநகர் மாவட்ட மையத்திடம் இதுகுறித்து விளக்கம் கேட்டு சங்கத்தின் விதிமுறைகளுக்கு குந்தகம் நேராமல் சங்கத்தை வழிநடத்த அறிவுறுத்திய பின்னரும், விருதுநகர் மாவட்ட மைய நிர்வாகிகள் தொடர்ந்து மாநில மையத்தின் முடிவுகளின்படி செயலாற்றாமல் முன்னாள் நிர்வாகி தோழர் ச.இ.கண்ணனுடைய வழிகாட்டுதலின்படி செயல்பட்டு வந்ததால் கடந்த இரண்டு ஆண்டுகளாக செயல்பாடுகளை மாற்றிக்கொள்ளாமல் இருந்து வந்தனர்.

மாநில செயற்குழு, முன்னாள் நிர்வாகி தோழர் ச.இ.கண்ணனின் சங்க விரோதத் தொடர்செயல்களை பட்டியலிட்டுக்காட்டி அவரை விருதுநகர் மாவட்ட மையத்திலிருந்து அடிப்படை உறுப்பினரிலிருந்து நீக்கி தீர்மானம் அனுப்பச் சொல்லி கேட்டுக்கொண்ட பிறகும் விருதுநகர் மாவட்ட மையம், மாநில செயற்குழுவின் முடிவுக்கு செவி சாய்க்காததோடு, மாநில செயற்குழு தங்களை கட்டுப்படுத்தமுடியாது என்று மாநில மையத்திற்கு சவால் விட்டது. அதன் தொடர்ச்சியாக மாநில மையத்தின் ஒப்புதல் இல்லாமல் தனிப்பட்ட முறையில் மாவட்ட மாநாடு நடத்த நடவடிக்கைகளை முன்னெடுத்த நிலையில் மாநில மையம் விருதுநகர் மாவட்ட

மையம் நடத்தவிருந்த மாவட்ட மாநாட்டுக்கு தடை விதித்தது. நிலைமைகள் மேலும் மேலும் மோசமாவதை தவிர்க்கும்பொருட்டு உடனடி நடவடிக்கையாக விருதுநகர் மாவட்ட சங்க அலுவலகத்தை மாநில மையம் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டது. இதை எதிர்த்து நீதிமன்றம் சென்ற விருதுநகர் முன்னாள் மாவட்ட நிர்வாகிகளை மாநில மையம் நீதிமன்றத்திலும் எதிர்கொண்டது. மாநில மையத்தின் நியாயமான மற்றும் சட்டப்படியான நடவடிக்கைகளில் திருப்தியுற்ற காவல்துறை, அவர்கள் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் பெயரினை உபயோகிக்கவும் அதன்பெயரில் மாநாடு நடத்திடவும் தடை விதித்தது. இவற்றின் காரணமாக விருதுநகர் மாவட்ட நிர்வாகத்தை மாற்றியமைத்திட ஏதுவாக இடைக்கால ஏற்பாடாக விருதுநகர் மாவட்டத்தில் சங்க செயல்பாடுகளை முன்னெடுக்க சங்க அமைப்பு விதிகளின்படி ஒரு குழு அமைக்கப்பட்டது.

மாநில மையத்தின் செயல்பாடுகளை எதிர்க்கத் துணிந்துவிட்ட கலைக்கப்பட்ட விருதுநகர் மாவட்ட சங்கத்தின் நிர்வாகிகள் தனிப்பட்ட முறையில் ஒரு மாவட்ட மாநாடு நடத்தினர். இதையும் சங்கம் பெரிதுபடுத்தாமல் அவர்கள் மனம் திருந்தி வரவேண்டும் என்பதற்காக அதைப்பற்றி எந்த விமர்சனமும் செய்யாமல் அரசாங்கத்திடம் இருந்து அரசு ஊழியர்களுக்கு பெற்றுத்தர வேண்டிய உரிமைகளின்பால் கவனம் செலுத்திவந்தது. மேலும் மாநில மையத்திடம் கருத்து வேறுபாடு கொண்ட விருதுநகர் மாவட்ட நிர்வாகிகளை நேரில் அழைத்துப் பேசிட நடந்த முயற்சிகளை அவர்கள் மறுதலித்து விட்டனர்.

**சங்கத்தை முடக்க நீதிமன்றம் வரை சென்ற ''தோழமைகள்''!**

இருதரப்பினரும் அமர்ந்து பேசி தீர்க்க வேண்டிய கருத்துவேறுபாடுகளை ஒருசில நபர்கள் தடுத்து வந்ததோடு, பிரச்னையை நீதிமன்றம் வரை கொண்டு சென்றனர். விருதுநகர் நீதிமன்றத்தில் தங்களுக்கு எதிராக கிடைத்த தீர்ப்பிற்குப் பிறகு அவர்களின் கோபம் மாநில மையத்தை முடக்கியே தீர வேண்டும் என்பதாகவும், 13ஆம் மாநில மாநாட்டை நடைபெறாமல் நிறுத்திவிடவேண்டும் என்பதான ரௌத்திரமாகவும் மாறியது. விருதுநகர் மாவட்டத்தில் நிர்வாகியாக இருந்த ராம்குமார் என்பரின் பெயரில் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு எண்.27660/2019 நமது மாநில மையத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் பதிவு 2014ஆம் ஆண்டிலிருந்து புதுப்பிக்கப்படவில்லை அதனால் அது மாநாடு நடத்தவோ, உறுப்பினர் சந்தா மற்றும் நன்கொடை எதையும் வசூலிக்கக்கூடாது என்றும் அதன் வங்கிக் கணக்கை முடக்க வேண்டும் என்றும் கேட்கப்பட்டிருந்தது. இந்த வழக்கை அதன் ஆரம்பநிலையிலேயே நம்முடைய வழக்குரைஞர் திறம்பட எதிர்கொண்டு சங்கத்தின் பதிவு நீக்க அறிவிப்பை எதிர்த்து 2014ஆம் ஆண்டிலேயே மேல்முறையீடு செய்து அது தற்போது பதிவுத்துறை சரிபார்ப்புகள் முடிக்கப்பட்டு அரசாங்கத்தில் நிலுவையில் உள்ளதாக தெரிவித்ததன் பேரிலும் உயர்நீதிமன்றம் மேற்கண்ட வழக்கில் இடைக்கால உத்தரவு (ஸ்டே) வழங்க மறுத்து 01.10.2019ம் தேதிக்கு வழக்கை தள்ளி வைத்தது.

முன்னாள் நிர்வாகிகள் ச.இ.கண்ணன், லெட்சுமி நாராயணன் மற்றும் சிலர் தங்கள் மீதான தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சிகளின் காரணமாக அரசு ஊழியர்களின் அரணாகத் திகழும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தையும் அதன் செயல்பாடுகளையும் முடக்க நினைத்திருக்கும் செயலானது இதை அறியும் ஒவ்வொரு ஊழியர் மனதிலும் அவர்களின் மீது வெறுப்பினைத் தோற்றுவிக்கும் என்ற எண்ணத்தின் காரணமாக 13ஆம் மாநில மாநாட்டிலும் இந்த விஷயத்தை பெரிதுபடுத்தாமல் சங்கம் பெருந்தன்மையோடு, அவர்கள் இப்போதேனும் திருந்திவர வேண்டும் என்ற எண்ணத்துடன் செயல்பட்டது. ஆனாலும் அவர்கள் மாநில மையத்தை தங்கள் விரோதியாக எண்ணிக்கொண்டு மேலும் மேலும் தவறான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். சென்னை உயர்நீதிமன்றத்தில் 13ஆம் மாநில மாநாட்டிற்கு தடை வாங்க முடியவில்லை என்பதால் விருதுநகர் மாவட்டத்தில் தனிப்பட்ட முறையில் மாநாடு நடத்திய லியாகத் அலி என்பவர் பெயரில் மதுரை உயர்நீதிமன்றத்தில் இன்னொரு நீதிப்பேராணை மனுவை (20592/2019) மேற்கூறிய அதே காரணங்களின் பேரிலேயே தாக்கல் செய்தனர்.

அந்த வழக்கு மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் 25.09.2019ம் தேதி விசாரணைக்கு வந்தபோது மதுரை அமர்வானது 27.9.2019ம் தேதி முதல் நடக்கவிருந்த மாநாட்டை நிறுத்திடவோ, சங்கத்தை முடக்கிடவோ இடைக்கால

உத்தரவை பிறப்பித்திடவோ, தடையாணை உத்தரவை வழங்கிடவோ மறுத்து எதிர்மனுதாரர் களுக்கு அறிவிப்பு அனுப்ப உத்தரவிட்டு வழக்கை 15.10.2019ம் தேதிக்கு ஒத்தி வைத்தது. இரண்டு வழக்குகளிலும் தங்களின் எண்ணம் ஈடேறாத நிலையில், கலைக்கப்பட்ட விருதுநகர் மாவட்ட மையத்தின் நிர்வாகிகளில் ஒருவரான சீராளன் என்பவரின் பெயரில் மதுரை உயர்நீதி மன்றக்கிளையில் மேலும் ஒரு நீதிப்பேராணை மனுவை (மனு எண்.20910/2019) தாக்கல் செய்து அதில் நடைபெறுகின்ற 13ஆம் மாநில மாநாட்டில் கலந்துகொள்ள உத்தரவு கோரப்பட்டது. இந்த மனுவில் மதுரை உயர்நீதிமன்றக்கிளை 27.09.2019ம் தேதி பதிவுத்துறைத் தலைவர் இதுகுறித்து பரிசீலித்து எட்டுவாரத்திற்குள் முடிவெடுக்க உத்தரவிட்டது.

18.09.2019ம் தேதி சென்னை உயர்நீதி மன்றத்தில் பட்டியலிடப்பட்ட வழக்கிற்காக எதிர் உரையை தயார் செய்துகொண்டு நீதிமன்றம் போனபோது 27வது நீதிமன்றத்தில் வாசலில் முன்னாள் நிர்வாகிகள் தோழர்கள் ச.இ.கண்ணனும், லெட்சுமிநாராயணனும் நின்றிருந்தனர். மாநில மைய நிர்வாகிகள் வருவதை எதிர்பார்க்காத அவர்கள் மாநில மைய நிர்வாகிகளைப் பார்த்ததும் திரும்பிக்கொண்ட தோடு, இந்த இயக்கத்தின் ஸ்தாபகர் ஆசான் எம்.ஆர்.ஏ. பதிவு செய்து காப்பாற்றி வந்த இயக்கத்தின் பதிவு 2014ஆம் ஆண்டிலேயே ரத்து செய்யப்பட்டுவிட்டது. அதனால் இந்த சங்கத்தை முடக்க வேண்டும் என்று அவர்கள் தரப்பு வழக்குரைஞர் வாதிட்டபோது நிர்வாகிகள் கண்கள் கலங்கியது. இந்த கேள்விக்கு நமது வழக்குரைஞர் 2014ல் சில காரணங்களால், கணக்கு சரியாக சமர்ப்பிக்கப்படவில்லை என காரணமிட்டு சங்கத்திற்கு அறிவிப்பு வழங்கா மலேயே பதிவு ரத்து செய்யப்பட்டிருப்பதாகவும் அதற்கான மேல் முறையீட்டை அந்த உத்தரவு பிறப்பித்த அடுத்த வாரத்திலேயே தாக்கல் செய்யப்பட்டு அது தற்போது அரசாங்கத்திடம் நிலுவையில் உள்ளதாகவும் பதிலளித்து எதிர் உரையும் தாக்கல் செய்தார். நமது தரப்பு வழக்குரைஞரின் வாதத்தை கேட்ட நீதியரசர் அரசு வழக்குரைஞரிடம் நமது வழக்குரைஞர் சொல்வது உண்மைதானா என்பதை உறுதி செய்துகொண்டு வழக்கை 1.10.2019, அதன் பிறகு 5.11.2019ம் தேதிக்கும் ஒத்தி வைத்த தோடு தடையாணை வழங்க மறுத்துவிட்டார்.

**நமக்கான கடமையும் பொறுப்பும் எவை, முன்னோடிகள் கட்டிக் காத்த இயக்கத்தை முடக்கப் பாடுபடுவதா?**

அதாவது தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சி, தனிப்பட்ட வன்மம் இவற்றின் காரணமாக ஒரு பெரிய சங்கத்தை ஒரு சிலர் எந்த வழியிலாவது முடக்கிவிடப் பார்ப்பது, அதற்காக அவர்கள் செய்யும் பொய்களும், போடும் நாடகங்களும் இன்றுவரை தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இயக்கத்தில் இருப்பவர்கள் சில நேரங்களில் தவறுகள் செய்வது இயற்கைதான். அதை தாயுள்ளத்தோடு பொறுத்துக்கொண்டு அவர்கள் திருந்த வழி ஏற்படுத்தித் தருவதும், அதை வெளியே தெரியாமல் பார்த்துக்கொண்டு அவர்களை திருத்த பல்வேறு விதமான வழிகளை மேற்கொண்டு சங்கத்தின் ஒற்றுமையை காக்க வேண்டியதும்தான் அனைவரையும் அரவணைத்து உன்னத லட்சியங்களுக்காக, உரிமைகளுக்காக போராடும் ஒரு பேரியக்கத்தின் செயலாக இருக்க வேண்டும். இதுநாள் வரை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கமும் அதைத்தான் செய்து வந்திருக்கிறது. இனியும் அதைத்தான் அது செய்யும் என்பதை மேற்சொன்ன நிகழ்வுகள் மூலம் ஒவ்வொரு அரசு ஊழியருக்கும் உணர்த்த கடமைப்பட்டுள்ளது இச்சங்கம். நம்முடைய தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சிகள் வன்மங்களுக்காக உயரிய நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டு முன்னோடித் தோழர்களின் வழியில் உரிமைகளை மீட்டெடுக்க பலவித இயக்கங்களை தியாகங் களை செய்து கொண்டிருக்கும் இச்சங்கத்தை முடக்கி விடவோ உடைத்து விடவோ முயல் பவர்கள் இனிமேலாவது அத்தகைய நடவடிக்கை களை கைவிட்டு இயக்கத்தின் வளர்ச்சிக்காகவும் அரசு ஊழியர்களின் உரிமைகளுக்காகவும் தங்களின் சக்தியையும் யுக்தியையும் பயன்படுத்த முன்வர வேண்டும்.

நடந்து முடிந்த 13ஆம் மாநில மாநாட்டில் ஜனநாயக முறையில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டு அது ஏற்கப்பட்டு ஜனநாயக வழிமுறைப்படி நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரும் சிலர் மாநில மையத்தை குறைகூறிக்கொண்டே பிரிவினை வாதங்களை பேசிக்கொண்டிருப்பது. இயக்கத்

திற்கும் நல்லதல்ல; அவர்களுக்கும் நல்லதல்ல என்பதை உணர வேண்டும்.

நம்முடைய இயக்கத்தைப் பொறுத்தவரை பதவி என்பது பந்தாவோ, பகட்டோ, பவிசான அந்தஸ்தோ அல்ல என்பதை அனைத்து ஊழியர்களும் அறிவார்கள். பதவி என்பதை கூடுதல் பொறுப்பாகவே இந்த இயக்கத்தின் நிர்வாகிகள் அனைவரும் உணர்ந்துள்ளார்கள். புதிதாக பொறுப்பேற்றிருக்கும் நிர்வாகிகள் சொல்லிக்கொள்ள விழைவதும் இதைத்தான், இயக்கம் என்பது கூட்டுத் தலைமை, கூட்டுப் பொறுப்பு. கூட்டு கருத்துக்களின் மூலம் முடிவுகள் இறுதிப்படுத்தப்பட்டே அதன்பேரில் போராட்டங்களும், இயக்க நடவடிக்கைகளும் நடந்து வருகின்றன. இனியும் அது தொடர்ந்து நடைபெறும்.

### பின்னடைவுகள் தோல்விகள் அல்ல!

எந்தப் போராட்டத்திலும் நாம் சமரசம் செய்து கொண்டு அடிபணிந்து போனது கிடையாது. நம்கூட வந்தவர்களில் சிலரால் இந்த இயக்கத்திற்கு பின்னடைவு ஏற்பட்டிருக்கலாம். அந்த பின்னடைவு நிச்சயம் தோல்வி கிடையாது. அந்த காரணத்திற்காக நாம் நம் இயக்க நடவடிக்கையை நிறுத்தியது கிடையாது. போராட்டங்களில் சில நேரங்களில் தொய்வு ஏற்படுவதும், சுற்றுப்புற சூழலைப் பொறுத்து போராட்டத்தின் வீரியத்தை மட்டுப்படுத்துவதோ அல்லது தள்ளிப்போடுவதோ எல்லா இயக்கங் களிலும் நடக்கும் இயல்பான விஷயங்களே. போராட்டக்களத்தில் இது ஒருவகை போர் முறையே. அது பதுங்கிப் பாயும் வேங்கையின் போர்க்குணம் போன்றது. பதுங்கிப்பாயும் தந்திரங்களும், தள்ளிப்போடும் சாணக்கியத் தனங்களும் போர்முறையில் இன்றியமையாதவை யாகும். போராட்ட முறைகளிலும் அதுவே சாலச்சிறந்ததாக அமைந்து வந்துள்ளது.

### வளர்த்த கடா வளர்த்தவனையே முட்டுவதன்பேர் வலிமையன்று, வாலறிவின்மை!

அதிகார வர்க்கங்கள் சிலவும், அதற்குத் துணைபோகும் சிலரும் இந்த இயக்கத்தை இருட்டடிப்பு செய்ய கடந்த சில மாதங்களாகச் செய்த சூழ்ச்சிகளும், தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சி களால் சங்கத்தின் முகத்தை சிதைத்து சின்னாபின்னப்படுத்திவிடலாம் என்று எய்த அம்புகளும், கற்களும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் என்ற எஃகு மார்பின் மீது மோதி உடைந்து வீழ்ந்திருக்கின்றன. பெற்ற தாயையே திட்டித் தீர்த்த ஊதாரி மகனைப் போல இந்த சங்கம் வார்த்தெடுத்த தோழமைகளில் சிலரே இந்த தாய் இயக்கத்தை முடக்கிவிட நீதிமன்றம் வரை சென்றிருப்பதையும் இந்தச் சங்கம் புன்முறுவலோடு எதிர்கொண்டிருக்கிறது.

பாசம் காட்டி வளர்த்த மகன் மோசம் போய்விட்டது மட்டுமல்லாமல், பெற்ற தாயையே வெட்டி வீழ்த்தாமல் விடமாட்டேன் என்று முரண்டு பிடிப்பதும், எட்டி உதைத்தாலும் வெட்டிப் புதைக்க நினைத்தாலும் நீ என் மகன் என்பதை அவனுக்கு நினைவுபடுத்துகின்ற தாயுள்ளம், அவனைக் கட்டியணைத்து சுற்றியிருக்கும் சூழ்ச்சிகளில் இருந்து காப்பாற்ற முயற்சிகள் மேற்கொள்வதைப்போல் இந்த சங்கம், சந்தர்ப்ப சூழ்நிலைகளால் திசைமாறிப் போனவர்களை அரவணைத்து அவர்களின் அனைத்து சந்தேகங்களையும் தீர்த்திருக்கிறது; தீர்க்கவும் காத்திருக்கிறது. அதனால் தான் அரசு ஊழியர் சங்க வரலாற்றில் எப்போதும் இல்லாத நிகழ்வாக எல்லா நிர்வாகப் பதவிகளுக்கும் வாக்களிப்பு மூலம் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றனர். இந்த நிகழ்வு தனிப்பட்ட நபரின் தெரிவாக இல்லாமல் ஜனநாயக முறை களின்படி இந்தச் சங்கம் செயல்பட்டு வருவதை மீண்டும் எல்லோருக்கும் நிரூபித்திருக்கிறது.

விவாதங்கள், விளக்கங்கள், கருத்துமோதல் கள், நிர்வாகிகள் தேர்வுகள் எல்லாம் முடிந்து இந்த சங்கத்தை வழிநடத்த நிர்வாகிகள் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளனர். வென்றவர்கள் எல்லாம் வீராதிவீரர்களும் அல்லர், தோற்றவர்கள் எல்லாம் விரோதிகளும் அல்லர். ஜனநாயகபூர்வமான ஒரு அமைப்பில் வெற்றிகளும் தோல்விகளும் சமமான வையே சகஜமானவையே. வென்றவர்களும் தோற்றவர்களும் அவற்றைப் பொருட்படுத்தாது இந்த இயக்கத்தின் முன்னேற்றத்திற்காக, கொண்ட லட்சியங்களுக்காக, போராடிப் பெற்ற உரிமைகளை விட்டுவிடாமல் காப்பதற்காக, பெற வேண்டிய உரிமைகளுக்காக அனைத்து துறைகளைச் சார்ந்த ஊழியர்களும் ஒன்றுகூடி நிற்க வேண்டிய அவசியமும் அவசரமும் உள்ளது. ஊழியர்களின் மனதை முழுமையாக வெல்ல வேண்டுமானால் பொறுப்பிலுள்ளவர்கள் அனை வரும் ஒருமித்த கருத்தோடும், கைகோர்த்த கரத்தோடும் கடமையாற்ற வேண்டும்.

**லட்சியப் பயணங்கள் தொடரும், ஊழியர் உரிமையும், மக்கள் நலனும் நிச்சயம் மலரும்!**

கைவிடப்படும் மக்கள் நலன், சூறையாடப் படும் இளைஞர்களின் எதிர்காலம், மறுக்கப்படும் அரசு ஊழியர்களுக்கான உரிமைகள், தடுக்கப் படும் தரமான மாணவர் கல்வி இவற்றை மீட்டெடுப்பதாக நமது சங்கம் ஊழியர்-மக்கள் சந்திப்பு பிரச்சார இயக்கம் நடத்திட 13ஆம் மாநில மாநாட்டில் முடிவாற்றியது. அதன்படி 11.11.2019ம் தேதி தமிழகத்தின் ஐந்து முனைகளிலிருந்து அதாவது இராமேஸ்வரம், களியக்காவிளை (கன்னியாகுமரி), வேதாரண்யம், ஒசூர் மற்றும் கூடலூர் (நீலகிரி) ஆகிய இடங்களிலிருந்து தமிழகம் தழுவிய பிரச்சாரம் மேற்கொண்டு 16.11.2019ஆம் தேதி தலைநகர் சென்னையில் வந்துசேரும்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 18.11.2019ம் தேதி கோட்டை நோக்கி பேரணியாகச் சென்று நம்முடைய கோரிக்கை மனுவை அரசிற்கு அளித்துள்ளோம். நாம் சென்னையில் ஒன்று கூடுவதை முன்கூட்டியே தடுத்திடவும், தடை செய்யவும் அரசுத் தரப்பிலும், காவல்துறையாலும் பல தடங்கல்களை செய்த நிலையில் மாநில நிர்வாகிகள் அவற்றினை முறியடித்து முன்னேறி னோம்.

தமிழக மக்களின் வாழ்வாதார பிரச்னைகளின் பேரில் அரசின் கவனத்தை ஈர்க்க நடத்தப்படும் இந்த ஊழியர்-மக்கள் சந்திப்பு பிரச்சார இயக்கம் மற்றும் பேரணியில் அனைத்துத்துறை ஊழியர் களும் அணியணியாய் கலந்து கொண்டு நம்முடைய ஒற்றுமையையும் உறுதிப்பாட்டை யும் உரிமை கேட்பையும் மீண்டும் ஒருமுறை இவ்வரசுக்கு எடுத்துக்காட்டி நம்முடைய அனைத்து உரிமைகளையும் வென்றெடுக்க களம் காணும், துவக்கமாக சுட்டெரிக்கும் வெயிலின் வெப்பத்தை பொருட்படுத்தாமல் அணிதிரண்டு எழுச்சிகரமாக பேரணியும், நிறைவு கூட்டமும் சிறப்புடன் அமைந்தது.

**ஒன்றுகூடி வென்று காட்டுவோம்!**

மேற்படி கோரிக்கைகளை வென்றெடுக்க அரசு ஊழியர்கள் ஒவ்வொருவரும் தொடர்ந்து மாவட்டங்களில் ஊழியர் - மக்கள் சந்திப்பு பிரச்சார யுக்திகளை மேற்கொள்வோம். போராட் டங்கள் தான் இதுவரை நம்முடைய உரிமைகளை காத்திருக்கிறது. உரிமைகளைக் கேட்டிருக்கிறது. உரிமைகளை மீட்டிருக்கிறது. இந்த லட்சியப் பயணத்தில் இலக்கு என்பது நம் வெற்றியாகவே இருக்கும். அதற்காக அனைத்துத் துறை ஊழியர்களும் ஒன்றுபட்டு கைகோர்ப்போம்!

**நம்முடைய இலக்கோ உரிமை மீட்டில் இருக்க, ஒருசிலரின் இலக்கோ இயக்கத்தை முடக்குவதில் இருக்கு!**

நம்முடைய சங்கத்தையும், இயக்க நடவடிக்கைகளையும் பலவீனப்படுத்தும் வகையில் நமது சங்கத்தில் மாநில, மாவட்ட நிர்வாகிகளாக இருந்து செயல்பட்டவர்களில் ஒரு சிலர் தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை சங்கங் களின் ஒருங்கிணைப்புக்குழு என்ற பெயரில் அரசு ஊழியர்களுக்கும் சங்க உறுப்பினர்கள் மற்றும் முன்னணி ஊழியர்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கில் நம்முடைய கோரிக்கைகளையே கொள்கைகளாக வடித்துக் கொண்டு அரசிடம் தனிப்பட்ட முறையில் கோரிக்கை வைத்து அதன் காரணமாகவே கோரிக்கைகள் வெற்றிபெறும் என்று பிரச்சாரம் செய்ய ஆரம்பித்துள்ளனர். அவர்களை பொருட் டாக கருதாமல், புறந்தள்ளி வைத்துவிட்டு, நமக்கான லட்சியப் பயணத்தை நோக்கி முன்னேறுவோம். நமக்கான, நாட்டுக்கான உரிமைகளை நாம் எல்லோரும் கரம்கோர்த்து வென்று காட்டுவோம் தோழர்களே!

இயக்கத்தை முடக்கிவிட்டு என்ன செய்துவிட துடிக்கிறார்கள் இவர்கள்

வெற்றிக்கனிகளே நமது உரிமைகளுக்கான இலக்காக இருக்கும்!

கருத்து வேறுபாடுகளைக் களைந்து ஒருமித்து களம் காண்போம்!

அனைத்துத்துறை ஊழியர்களும் ஒன்றுபட்டு நின்று

வென்றுகாட்டுவோம் நம் உரிமைகளை!

- மாநில மையம்

**இரத்த தானம் செய்வோம்**

**சாலையில் அல்ல! உயிர்களை பாதுகாக்க**

# சங்கத்தை முடக்க பொய்யான காரணங்களுடன் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் விவரங்கள்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் வெம்பக்கோட்டை வட்டாரத்தின் தலைவராக இருக்கும் திருவாளர் கே.லியாகத் அலி என்பவர் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தை முடக்கக்கோரியும், தஞ்சாவூரில் 13ஆவது மாநில மாநாடு நடத்தக்கூடாது என்று தடையாணை கேட்டும் மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் செப்டம்பர் 2019 முதல் வாரத்தில் தாக்கல் செய்துள்ள நீதிப்பேராணை, ரிட் மனு எண்.20592/2019 ஆக பட்டியலிடப்பட்டு அனுமதிக்கு வந்தது. எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பி அவர்கள் தரப்பை கேட்காமல் தடையாணை பிறப்பிக்க முடியாது என்று மதுரை உயர்நீதிமன்றம் தானாகவே தடையாணைக்கு மறுத்து அறிவிப்பு அனுப்ப உத்தரவிட்டது. சில அரசியல் காரணங்களால் இந்த சங்கத்தை முடக்கிவிட அதிகாரவர்க்கத்தால் எடுக்கப்பட்ட மேற்கண்ட நடவடிக்கையை அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட அடுத்த வாரத்திலேயே நமது சங்கம் மேல்முறையீடு செய்து அந்த மேல்முறையீடு அரசாங்கத்தில் நிலுவையில் இருக்கும் நிலையில், எதையும் தீரவிசாரிக்காமலேயே தனிப்பட்ட காழ்ப்புணர்சி காரணமாக ஒரு நபரின் தூண்டுதலின் பேரில் எம்.ஆர்.அப்பன் அணி என்று அவர் பெயரை கூவிக்கொண்டே அவர் உருவாக்கிய இந்த சங்கத்தை அழிக்கப்பார்க்கும் கருங்காலிக் கூட்டத்தின் ஒரு மூர்க்கர் மதுரை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மேற்படி வழக்கின் பிரமாணப் பத்திரத்தின் தமிழ் மொழியாக்கம் உறுப்பினர்களின் பார்வைக்காகவும் சங்கத்திற்கு எதிராக செயல்படும் கும்பலின் குதர்க்கமான நோக்கத்தை அனைத்து அரசு ஊழியர்களும் அறிந்து கொள்வதற்காகவும், உண்மை நிலையை உணர்வதற்காகவும் இங்கே பதிவிடப்படுகிறது.

‘‘திரு.எம்.காதர் பாட்சாவின் மகனான 49 வயதுடைய, விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர், பிள்ளையார்குளம் அஞ்சல், துங்கக்குளத்தில் வசிக்கும் கே.லியாகத் அலி என்கிற நான் தற்காலிகமாக மதுரைக்கு வந்து, கீழ்காண்பவற்றை உறுதிபடவும், உண்மையாகவும் கூறுகிறேன்.

1. இதில் நான்தான் மனுதாரர்; வழக்கின் உண்மைகள் எனக்கு நன்கு பரிச்சயமானவை; எனவே, இந்த பிரமாணப் பத்திரத்தை தாக்கல் செய்ய தகுதி படைத்தவன் இதே நிவாரணத்தைக் கோரி இதே நோக்கத்திற்காக வேறு எங்கும் வேறு எங்கு எந்த ரிட் மனுவும் நான் தாக்கல் செய்யவில்லை.

2. பதிவு எண். 237/84-ஐ கொண்டுள்ள “தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்” என்ற காலாவதியான சங்கத்தின் பெயரில் பிரதிவாதி எண்.4 செயல்படுவதற்கு எதிராக உரிய பொருத்தமான நடவடிக்கைகளை தொடங்க பிரதிவாதி எண்.1க்கு ஆணையிடக் கோரி இந்த ரிட் மனு தாக்கல் செய்யப்படுகிறது; இதன் தொடர்ச்சியாக பிரதிவாதி எண்.3 மற்றும் 4 ஆகியோர் இந்த மேதகு நீதிமன்றம் நிர்ணயிக்கும் கால எல்லைக்குள், காலாவதியான சங்கத்தின் பெயரில் செயல்படுவதையும், நிதி வசூலிப்பதையும் தடுக்கக் கோரியும் இந்த மனு தாக்கல் செய்யப்படுகிறது.

3. விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை வட்டாரத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலராகிய நான், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் வெம்பக்கோட்டை வட்டாரத்தின் தலைவராகவும் இருக்கிறேன். ஐந்தாவது பிரதிவாதியின் சங்கம் என, அதாவது தமிழ்நாடு பதிவுச் சட்டம் (இனி சுருக்கமாக சட்டம் என்று அழைக்கப்படும்) 1975-ன்கீழ் (பதிவு எண். 297/1984) பதிவு செய்யப்பட்ட இதே தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தில் நானும் உறுப்பினராக உள்ளேன். மற்றவற்றோடு, தமிழ்நாடு அரசு

ஊழியர்களின் நலனை மேம்படுத்துவது சங்கத்தின் நோக்கமாகும். அது பதிவு செய்யப்பட்ட சட்டத் திட்டங்களின்கீழ் நிர்வகிக்கப்படுகிறது. தமிழ்நாடு அரசின் ஊழியர்களாக உள்ள சங்கத்தின் உறுப்பினர்கள் வழங்கும் பங்களிப்பு மற்றும் நன்கொடைகள மூலம் சங்கம் நடத்தப்படுகிறது. (i) தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம், கதவு எண்.46, தேரடி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5 (ii) திருவண்ணாமலை (iii) கடலூர் (iv) தாமஸ் கிளப், கோயம்புத்தூர் (v) உதகமண்டலம் (vi) கரூர் (vii) நாகப்பட்டினம் (viii) புதுக்கோட்டை (ix) மதுரை (x) சிவகங்கை (xi) இராமநாதபுரம் (xii) விருதுநகர் (xiii) சங்கரன்கோவில் (xiv) நாகர்கோவில் (xv) திருச்செந்தூர் (xvi) ஸ்ரீவைகுண்டம் (xvii) விளாத்திகுளம் (xviii) உசிலம்பட்டி (xix) தக்கலை (xx) செங்கல்பட்டு (xxi) தர்மபுரி (xxii) திருவாரூர் (xxiii) விழுப்புரம் (xxiv) செங்கல்பட்டு (xxv) தேனி (xxvi) வேலூர் (xxvii) உடுமலைப் பேட்டை (xxviii) ஈரோடு (xxix) சாத்தான்குளம் (xxx) பெரியகுளம் (xxxi) உடுமலைப்பேட்டை ஆகிய இடங்களில் மேற்கண்ட சங்கத்திற்கு அசையா சொத்துக்கள் உள்ளன. மேலும் கணக்கு எண்.0346000100103835 என்ற கணக்கில் பஞ்சாப் நேஷனல் வங்கியில் மேற்கண்ட சங்கத்திற்கு சேமிப்புக் கணக்கு உள்ளது.

4. நான்காவது பிரதிவாதியான சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளர் 5வது பிரதிவாதி ஆவார். TNGEA சட்டவிதி என்றழைக்கப்படும் சங்க சட்ட விதியை மேலே குறிப்பிட்ட சட்டத்தின்கீழ் சங்கம் உருவாக்கியுள்ளது. சங்க சட்ட விதி 131.1ன்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலம் இரண்டு ஆண்டுகளாகும். மேற்கண்ட சங்கத்தின் சட்ட விதி 12 தகுதி பெற்ற நபர்களிடமிருந்து சங்க நிர்வாகிகளின் காலியிடங்களை நிரப்பிட மாவட்ட செயற்குழுவிற்கு அதிகாரம் அளித்துள்ளது. மேலும் சங்க நிர்வாகிகள் பதவியில் 50 சதவீதத்திற்கு மேல் காலியாக இருந்தால், மாவட்ட நிர்வாகிகளின் அனைத்து பதவிக்கும் தேர்தல் நடத்த சங்க விதி வகை செய்துள்ளது.

5. ஐந்தாவது பிரதிவாதி 08.01.2017 அன்று மாநில பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றும், 4வது பிரதிவாதி சங்கத்தின் சங்க விதிகளின்படி அவரது பதவிக்காலம் 03.01.2019 முடிந்துள்ளது என்றும் மரியாதையுடன் சமர்ப்பித்துக் கொள்கிறேன். மேலும் பல்வேறு முரண்பாடுகள் போன்றவற்றை தீர்க்க மாநில அளவில் வேலைநிறுத்தம் செய்ய திருவண்ணாமலையில் 06.01.2017; 07.01.2017 மற்றும் 08.01.2017 ஆகிய நாட்களில் நடைபெற்ற மாநில மாநாட்டில் ஒரு தீர்மானத்தை சங்கம் நிறைவேற்றியது என்றும் சமர்ப்பித்துக் கொள்கிறேன். மேற்கண்ட சங்கத்தின் உறுப்பினர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்; ஆனால் குறிப்பிட்ட சங்கத்தின் உறுப்பினர்களின் நலனுக்கு எதிராக சில நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டார். நான்காவது பிரதிவாதியின் அந்த நடவடிக்கைகள் குறித்து விருதுநகர் மாவட்ட நிர்வாகிகள் கேள்வி எழுப்பியபோது, அவர் பொறுப்பற்ற, மெத்தனமான மற்றும் தட்டிக்கழிக்கும் பதிலை அளித்துள்ளார்.

6. அவர்களுக்கு எந்த அறிவிப்பும் அளிக்காமல் விருதுநகர் மாவட்ட நிர்வாகிகளுக்கு அதிர்ச்சியும், ஆச்சரியமும் அளிக்கும் வகையில் 04.08.2019 நாளிட்ட தீர்மானம் மூலம் குறிப்பிட்ட சங்கத்தின் விருதுநகர் மாவட்டத்தை 5வது பிரதிவாதி கலைத்துள்ளார் என்று மேலும் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

பின்னர், 04.08.2019 நாளிட்ட அதே தீர்மானத்தின்மூலம் குறிப்பிட்ட சங்கத்தின் விருதுநகர் மாவட்டத்திற்கு ஒரு அட்ஹாக் குழுவை சட்டவிரோதமாக ஐந்தாவது பிரதிவாதி நியமித்துள்ளார். பாதிக்கப்பட்ட குறிப்பிட்ட சங்கத்தின் விருதுநகர் மாவட்ட நிர்வாகிகள், இரண்டாவது பிரதிவாதியும், குறிப்பிட்ட சட்டத்தின் ஷரத்து 36ன்கீழ் 08.08.2019 நாளிட்ட மேல்முறையீட்டை அளித்தனர். மேல்முறையீடு நிலுவையில் இருக்கும்போது, விருதுநகர் மாவட்டக் குழுவின் விவகாரங்களில் எந்த விதத்திலும் தொடர்பில்லாத திரு.கருப்பையா, கோவிந்தன், குமாரபாண்டியன் ஆகியோர் தங்களது

கையாட்களுடன் விருதுநகர் மாவட்டக் குழு செயல்படும் இடத்தில் நுழைந்து, கட்டிடத்தை விட்டு காலி செய்யுமாறு நிர்வாகிகளை மிரட்டினர். எனவே, உரிய சட்ட வழிமுறையின் கீழ் அல்லாது வாதிகளை பிரதிவாதிகளையும், அவர்களது ஆட்கள் மற்றும் முகவர்களை கட்டிடத்திலிருந்து பலவந்தமாக அப்புறப்படுத்துவதை தடுக்க நிரந்தரத்தடை வேண்டி ஓ.எஸ்.எண்.120/2019ன்படி விருதுநகர் முனிசீப் நீதிமன்றத்தில் குறிப்பிட்ட சங்கத்தின் விருதுநகர் மாவட்ட அலகு வழக்கு தொடர்ந்துள்ளது; அது இன்னும் நிலுவையில் உள்ளது.

7. குறிப்பிட்ட சட்டத்தின் ஷரத்து 44(4)ன்கீழ் நான்காவது பிரதிவாதியான சங்கம் காலாவதியான சங்கம் என்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அது அரசாணை 17 நாள் 07.05.2014-ன்படி அரசாங்க கெஜட் அறிவிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது என்றும், அதன்படி நான்காவது பிரதிவாதியான சங்கத்தின் பெயர் நீக்கப்பட்டுள்ளது என்று இரண்டாவது பிரதிவாதியின் அலுவலகத்தில் விசாரித்ததில் எனக்கு தெரியவந்துள்ளது என்று மரியாதையுடன் சமர்ப்பித்துக் கொள்கிறேன். அதற்குப் பிறகு கெஜட் அறிவிக்கையின் தொடர்புடைய நகல்களை நான் பெற்றேன்; சட்டத்தின் 44(4) ஷரத்தின்படி நான்காவது பிரதிவாதியான சங்கம் கலைக்கப்பட்டது என்று அறிந்து கொண்டேன்.

மேலும் காலாவதியான குறிப்பிட்ட சங்கத்தை புதுப்பிக்க 4வது பிரதிவாதி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தெரிகிறது. இந்த சூழ்நிலையில் நான்காவது பிரதிவாதி முதலாவது பிரதிவாதியிடம் ஓர் ஆண்டுக்குள் மேல்முறையீடு செய்திருக்க வேண்டும்; ஆனால் அவர் தவறி விட்டார். 4வது பிரதிவாதியான சங்கம் காலாவதியாகிவிட்டது என்ற உண்மையை ஐந்தாவது பிரதிவாதி மறைத்து விட்டார். இந்த உண்மையை வெளிப்படுத்தாமல், சங்கத்தின் மாநில பொதுச் செயலாளராக செயல்பட்டு, சட்ட விதிகளுக்கும், அதன்கீழ் உருவாக்கப்பட்ட விதிகளுக்கும் மாறாக சட்ட விரோதமாக நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்.

8. இந்த சூழ்நிலைகளில் காலாவதியான குறிப்பிட்ட சங்கத்தின் 13வது மாநில மாநாட்டை 2019 செப்டம்பர் 27 - 29 வரை தஞ்சாவூர் ஜெயராம் மஹாலில் 5வது பிரதிவாதி கூட்டியுள்ளார். காலாவதியான குறிப்பிட்ட சங்கத்தில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட சட்டத்தின் ஷரத்துகளின்படி குறிப்பிட்ட சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கத்தை பதிவுத்துறை தலைமை பதிவாளர் காலாவதியான சங்கமாக பிரகடனப்படுத்தலாம் என்று மரியாதையுடன் சமர்ப்பித்துக் கொள்கிறேன். அத்தகைய பிரகடனம் செய்யப்பட்டால் சட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட காலவரம்பிற்குள் சங்கத்தின் நிர்வாகிகள் சங்கத்தை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கலாம். காலாவதியான சங்கத்தை புதுப்பிக்கக்கூடிய ஒரே வழிமுறை அதுதான். இந்த நிகழ்வில் சங்கத்தை புதுப்பிக்க அத்தகைய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை; 4வது பிரதிவாதியான சங்கத்தின் பதிவை ரத்து செய்ததை எதிர்த்து, சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட காலவரம்பிற்குள் பிரிவு 45-ன்கீழ் எந்த மேல்முறையீடும் தாக்கல் செய்யப்படவில்லை.

எனவே, குறிப்பிட்ட சங்கத்தை காலாவதியானது என்று அறிவித்த முதல் பிரதிவாதியின் அறிவிக்கை இறுதியான ஒன்றானது; பிரிவு 44-ன்கீழ் குறிப்பிட்ட சங்கத்தின் பதிவை ரத்து செய்யும் விளைவு ஏற்பட்டுள்ளது. பதிவு ரத்து செய்தபிறகு, குறிப்பிட்ட சங்கத்தின் நடவடிக்கை எதனையும் 4வது பிரதிவாதி மேற்கொள்ள முடியாது. எனவே, 07.05.2014 அன்று முதல் 4வது பிரதிவாதியான சங்கம் இருப்பில் இல்லை. சங்கத்தின் பதிவு ரத்து செய்யப்பட்ட பிறகு, அதன் நிர்வாகிகள் தங்களது பதவியை இழக்கின்றனர். எனவே, குறிப்பிட்ட சங்கத்தின் நிர்வாகிகளும், உறுப்பினர்களும் சாதாரண தனிநபர்கள் மட்டுமே; இருப்பில் இல்லாத குறிப்பிட்ட சங்கத்தின் நிர்வாகத்தையும், விவகாரங்களையும் நடத்த அவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை. இதற்கு மாறாக, நான்காவது பிரதிவாதியின்

சங்கம், சங்கத்தின் வங்கிக் கணக்கை நிர்வகிக்கின்றனர்; எந்த சட்ட அதிகாரமும் இன்றி, சங்கத்தின் பெயரில் சந்தா மற்றும் நன்கொடைகளை வசூலிக்கின்றனர். சட்டத்தின் பிரிவு 44-ல் அடங்கியுள்ள விதிகளின்படி குறிப்பிட்ட சங்கத்தின் பதிவை புதுப்பிக்க 5வது பிரதிவாதி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஒரு மாநில மாநாட்டை நடத்த 5வது பிரதிவாதி தன்னிச்சையாக முடிவெடுத்து, துண்டு பிரசுரங்களை வெளியிட்டுள்ளார். மேலும், நிர்வாகிகளின் பட்டியல் ஒன்றை தயாரித்து, மாநில மாநாட்டில் அதனை அறிவிக்க 5வது பிரதிவாதி முடிவெடுத்துள்ளார் என்று தெரிய வருகிறது.

9. எனவே, மேற்கண்ட உண்மைகளை குறிப்பிட்டு, மேலும் குறிப்பாக, சட்டம் மற்றும் விதிகளுக்கு மாறாக காலாவதியான சங்கத்தின் பெயரில் மாநில பொதுச் செயலாளராக செயல்படுவதையும், நடவடிக்கைகளில் ஈடுபடுவதையும் தடுத்து நிறுத்துமாறு கோரி, பிரதிவாதி 1 மற்றும் பிரதிவாதி 2 ஆகியோரிடம் நான் 19.09.2019 அன்று முறையீட்டை செய்தேன்; அவர்களுக்கு மடல் தெரிந்த காரணத்தினால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

வேறு எந்த சமமான, பயனளிக்கக்கூடிய மாற்றுத் தீர்வு எதுவும் இல்லாத நிலையில், கீழ்க்கண்ட காரணங்களுக்காக இந்த ரிட் மனுவை தாக்கல் செய்ய நான் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளேன்.

காரணங்கள்

(அ) மனுதாரருக்கு நியாயமான எதிர்பார்ப்பு இருப்பதால், மனுதாரரின் 18.09.2019 நாளிட்ட முறையீட்டை பிரதிவாதிகள் பரிசீலித்திருக்க வேண்டும்.

(ஆ) 1975ஆம் வருடத்து தமிழ்நாடு சங்கப் பதிவு சட்டத்தின் பிரவு 47-ன்படி, தெரிந்தே தவறான பதிவுகளை செய்யும் அல்லது அதற்கு காரணமாக இருக்கும் ஒருவர், எந்த பதிவேடு, கணக்கு, நிதிநிலை அறிக்கை அல்லது இதர ஆவணத்தின் விடுபாடு செய்யும் ஒருவர், ஐநூறு ரூபாய் வரை நீடிக்கக்கூடிய அபராதம் மூலம் தண்டிக்கப்படக்கூடியவர்.

(இ) குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 44(4)ன்கீழ் மூன்றாவது பிரதிவாதியான சங்கம் காலாவதியான சங்கம் அறிவிக்கப்பட்டுள்ளது; அரசு ஆணை எண்.17 நாள் 7.5.2014-ன்படி கெஜட் அறிவிக்கையில் அது வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி மூன்றாவது பிரதிவாதியான சங்கத்தின் பெயர் நீக்கப்பட்டுள்ளது. எனவே, காலாவதியான சங்கத்தின் பெயரில் பிரதிவாதி 5 செயல்படுவதை பிரதிவாதி 1 மற்றும் 2 தடுத்திருக்க வேண்டும்.

(ஈ) தமிழ்நாடு சொசைட்டி பதிவு சட்டம் 1975ன் பிரிவு 44(8)ன்படி, பிரிவு 44(4)ன்படி வழங்கப்பட்ட ஆணைக்கு எதிராக மேல் முறையீடு எதுவும் செய்யாவிடில், காலாவதியான குறிப்பிட்ட சங்கம் செயல்பட முடியாது. தமிழ்நாடு சொசைட்டி பதிவு சட்டம் 1975-ன் பிரிவு 39-ல் உள்ள ஷரத்துக்கள் அமலுக்கு வந்திருக்க வேண்டும்; எனவே, தனது நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலிருந்து காலாவதியான சங்கம் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்த ரிட் மனுவில் தீர்ப்பு வழங்கும் வரை 237/84 என்ற பதிவு எண் கொண்டுள்ள காலாவதியான சங்கத்தின் அதாவது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் பெயரில் செயல்படுவதையும், நிதி வசூலிப்பதையும் 4வது மற்றும் 5வது பிரதிவாதிகளை தடை செய்து இந்த மாண்பமை நீதிமன்ற இடைக்காலத் தடை வழங்க நியாயம் கிடைக்க செய்ய வேண்டும் என்று மிகவும் மரியாதையுடன் வேண்டப்படுகிறது.

“237/84 என்ற பதிவு எண்ணை கொண்டுள்ள தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்” என்ற காலாவதியான சங்கத்தின் பெயரில் செயல்படுவதிலிருந்து பிரதிவாதி 5-க்கு எதிராக பொருத்தமான நடவடிக்கை தொடங்க பிரதிவாதிக்கு ஆணையிடுமாறும், இந்த மாண்பமை நீதிமன்றம் நிர்ணயிக்கும் கால வரம்பிற்குள் காலாவதியான சங்கத்தின் பெயரில் செயல்படுவதையும், நிதி வசூலிப்பதையும் தடை செய்து ஆணையிடுமாறும் இந்த மாண்பமை நீதிமன்றத்தை வேண்டி இந்த ரிட் மனு தாக்கல் செய்யப்படுகிறது.”

❑

# மனம் போன போக்கிலே மனிதன் போகலாமா?...

பைபிள் கதைகளில் எனக்கு மிகவும் பிடித்த கதை மனம் மாறிய மைந்தன் என்கின்ற கதை. எனது சிறு வயதில் அருட் சகோதரர்கள் விவிலிய போதனை வகுப்பினை தேவாலயத்தில் நடத்துவார்கள். அந்த வகுப்பில் பிள்ளைகள் சேர்ந்து நீதிபோதனைகளை கற்க வேண்டுமென்று பங்கு தந்தை அவர்கள் வீடு தோறும் ஏறி இறங்கி பங்கு உறுப்பினர்களிடம் வலியுறுத்துவார்.

அப்படி ஒரு நாள் வகுப்பில் கேட்ட கதைதான் மனம்மாறிய மைந்தன் எனும் கதை. ஒரு கிராமத்தில் ஒரு தந்தைக்கு இரண்டு மகன்கள். முதல் பிள்ளை தாய் தந்தையின் சொற்படி நடப்பவன், கடவுளுக்கு பயந்து நடப்பவன், தந்தையின் பணிகளுக்கு உதவியாக இருப்பவன். இளைய மகன் ஊர் சுற்றி. தந்தையின் பேச்சை கேட்பதில்லை. கடவுளுக்கும் அஞ்சுவது கிடையாது. தந்தையின் உழைப்பினால் கிடைக்கும் பொருட்களை ஊதாரியாக செலவு செய்பவன். தீய பழக்கங்களுக்கு அடிமையானதால், தந்தையிடம் எனது பாகத்தை பிரித்து வழங்கும்படி சொத்திற்கு பிரிவினையை உருவாக்கினான். சோர்ந்து போன தந்தை, கடவுளிடம் இளைய மகன் மனம் திருந்த வேண்டுமென்று பிரார்த்தித்து வந்தார். மனம் மாறாத இளைய மகன் தந்தையை கொல்லவும் தயாரானான். இறுதியாக தந்தை தனது உழைப்பால் உருவாக்கிய சொத்தினை இரண்டாகப் பிரித்து ஒரு பாகத்தை இளையவனிடம் கொடுத்தார். ஆண்டுகள் பல கடந்து ஒரு நாள் இரவு ஒரு பிச்சைக்காரன் அந்தத் தந்தையிடம் வந்து பிச்சை கேட்கிறான்.

தந்தையோ வந்திருப்பவன் பிச்சைக்காரன் அல்ல தனது இளைய மகன் என அறிந்துகொண்டு, மூத்த மகனிடம் வந்திருப்பவன் உனது சகோதரன் என்று கூறி கடவுளின் ஆசியால் மனம் திருந்திய மகனை நாம் ஏற்றுக்கொள்வதே கடவுளுக்கு நாம் செய்யும் நன்றி என இளைய மகனை ஏற்றுக் கொள்கிறார் தந்தை.

மேற்காசியாவில் மேய்ச்சல் தொழிலும் உழவுத் தொழிலும் முரண்பட்டு வளர்ந்த காலகட்டம்தான் மேற்சொன்ன கதையின் களம்.

இன்று நமது அமைப்பு செயல்படும் காலகட்டம் என்பது வலதுசாரி அரசியல் மேலோங்கியுள்ள சூழல், இடதுசாரி அரசியல் பலவீனப்பட்டுள்ள சூழல். உழைப்பாளி மக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் தான் சார்ந்த நிறுவனங்களின் வாயிலாக உழைப்பிற்கான சலுகைகளும் ஓய்வூதியமும் கிடைக்கப் பெற்றதற்கு முக்கிய காரணம் சோவியத் ரஷ்யாவின் சோசலிக அரசின் செயல்பாட்டின் காரணமாகத்தான் என்பதை நம்மைப் போன்ற போராடும் அமைப்புகள் உணர்ந்து, இன்று வருந்தி வரும் சூழலில்

ஜனநாயகம் என்ற பெயரில் தான் கட்டிக்காத்து வளர்த்த அமைப்பில் தனக்கு பதவி கிடைக்கவில்லை என்றால், அமைப்பையே கேள்விக்குள்ளாக்குவது என்றால் இவர்களை என்னவென்று சொல்வது?

இப்படிப்பட்டவர்கள் மனம் மாறிய மைந்தன், தந்தையின் இல்லம் தேடி வந்ததைப் போல், தமிழ்நாட்டில் அரசு ஊழியர்களின் ஒரே பாதுகாவலன் நமது அமைப்பு என்ற உணர்வோடு தந்தையின் இல்லமாக நினைத்து திரும்ப வேண்டும்.

இன்றைய சூழலில் இந்தப் பாடல் நினைவலைகளாக...

கண் போன போக்கிலே கால் போகலாமா?
கால் போன போக்கிலே மனம் போகலாமா?
மனம் போன போக்கிலே மனிதன் போகலாமா?
மனிதன் போன பாதையை மறந்து போகலாமா?

ஒன்றுபடுவோம்! போராடுவோம்!! முன்னேறுவோம்!!!

- **ம.அந்தோணிசாமி**

# தனியார்மயமாகும் மருத்துவத்துறை

மருத்துவ உலகில் வியத்தகு முன்னேற்றங்கள் பல ஏற்பட்டுள்ளன. மனிதனின் சராசரி ஆயுட்காலம் அதிகரித்துள்ளது. ஆயினும் மக்களுக்கு மருத்துவ வசதி கிடைப்பதில் தற்போது நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

ஏழை-பணக்காரர் இடையிலான ஏற்றத்தாழ்வு அதிகரித்துக் கொண்டு செல்வதும். ஏழை நாடுகளுக்கும் பணக்கார நாடுகளுக்கும் இடையே இடைவெளி கூடிக்கொண்டு செல்வதும்தான் இதற்கு காரணங்கள். மக்களுக்கு ஓரளவு கிடைத்திருந்த சுகாதார (மருத்துவ) வசதிகளையும் கூட பெருகிவரும் வறுமை அரிக்கத் தொடங்கி விட்டது.

வருவாய் ஏற்றத்தாழ்வு மட்டுமல்லாமல் சமூக சேவை வசதிகள் சுருங்கிக் கொண்டு செல்வது. இனரீதியிலும் ஆண்-பெண் பால் ரீதியிலும் பாரபட்சம் காட்டப்படுவது ஆகிய காரணங் களாலும் நல்வாழ்வுத் தரம் சரிகிறது. மருத்துவ வசதி கிடைக்காமல் இறப்பு விகிதம் அதிகரித் துள்ளதை ஆய்வறிக்கைகள் காட்டுகின்றன. வளர்ந்த நாடுகளின் பாரம்பரிய மருத்துவ அறிவு மற்றும் சிகிச்சை முறைகளும் சமூக அமைப்பு முறைகளும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன.

உலகப் பொருளாதார அமைப்பு முறையைச் சீரழித்ததன் விளைவாகத்தான் மேற்சொன்ன கேடுகள் ஏற்பட்டு வருகின்றன. பொருளாதார உலகமயமாக்கல் காரணமாக ஏழை நாடுகளின் கடன் சுமை மேலும் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. பணக்கார நாடுகளுக்கு சாதகமான மற்றும் ஏழை நாடுகளக்குப் பாதகமான உலக வர்த்தக நடைமுறைகள் திணிக்கப்படுகின்றன. இவற்றால் உலகப் பொருளாதார அமைப்பு முறைக்கு மேலும் சீரழிவு ஏற்பட்டுள்ளது. அதோடு நல்வாழ்வுத் துறையில் ஆரம்ப சுகாதாரப் பராமரிப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் ஏற்பட்ட தோல்வியும் உலக மக்களின் மருத்துவ வசதிப் பிரச்சனையை மேலும் நெருக்கடிக்கு உள்ளாகிவிட்டது.

1. மக்கள் நல்வாழ்வில் தேசிய இலக்கை அடையத் தவறியது: மருந்துக் கொள்கையைக் கிடப்பில் போட்டது: ஒட்டுமொத்த சமூகக் கொள்கையின் அங்கமாக மக்கள் நல்வாழ்வைப் பார்க்கத் தவறியது.

2. சமுதாயத்தின் பல்வேறு துறைகளுடன் மக்கள் நல்வாழ்வுத் துறை பின்னிப் பிணைந்துள்ளதை அரசு காணத் தவறியமை: அனைத்து துறைகளிலும் மக்கள் நல்வாழ்வுக்கு முன்னுரிமை கொடுக்கத் தவறியமை.

3. நல்வாழ்வுத் திட்டங்களில் உண்மையான ஈடுபாட்டுடன் மக்கள் சமுதாயத்தைப் பங்கேற்க செய்வதில் ஏற்பட்ட தோல்வி.

4. மருத்துவ சேவைத் துறையில் தனியாரை அனுமதித்தது: அதனால் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வு மற்றும் மருத்துவ சேவையின் அனைத்து நிலைகளிலும் அரசு தன் கடமைகளிலும் பொறுப்பிலும் இருந்து விலகிக் கொண்டமை:

5. மருத்துவ வசதியை வெறும் தொழில் நுட்ப ரீதியிலான வசதியாகப் பார்க்கும் குறுகிய கண்ணோட்டம் ஆகிய குறைபாடுகளாலும் உலக அளவில் மருத்துவ சேவையானது நெருக்கடியில் சிக்கிக் கொண்டிருக்கிறது.

### மக்கள் கையில் அவர்களது நல்வாழ்வு என்ற இலக்கை அடைய செய்ய வேண்டியவை

1. பெரும்பான்மை மக்களின் வாழ்வைச் சீரழிக்கும் புதிய பொருளாதாரச் சீர்திருத்தம் மற்றும் உலகமயமாக்கல் கொள்கையை நாட்டை விட்டு விரட்டுவது.

2. சுகாதார சேவைத் திட்டமிடலைப் பரவலாக்குதல், ஜனநாயகப்படுத்துதல், அத்திட்டங்களைச் செயல்படுத்த தேவையான நிதி ஒதுக்கீட்டை உறுதி செய்தல்.

3. மக்களை மையப்படுத்திய நல்வாழ்வுத் திட்டங்கள்: அவற்றின் செயல்பாட்டில் அவர்களது பங்கேற்பை உறுதி செய்தல்.

4. திட்டமிடுதலைப் பரவலாக்குதல் மூலமும் பொருத்தமான தொழில்நுட்பங்கள் மூலமும் அனைத்து மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுதல்.

5. மருத்துவ சேவையை கட்டுப்பாடற்ற, நெறியற்ற முறையில் வணிகமயமாக்குவதைக் கட்டுப்படுத்துதல்: அறிவுப்பூர்வமான, நெறி சார்ந்த, திறமையான மருத்துவ சேவையை ஊக்குவித்தல்.

6. ஏழை, எளியோரின் அமைப்புகளை உருவாக்கவும். சமுதாயத்தில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கவும் மக்களின் செயல்திறனை வளர்க்கவும் பாடுபடுவதற்காக மக்கள் இயக்கங்களை தன்னார்வத் தொண்டு நிறுவனங்களையும் ஓரணியில் திரட்டுதல்.

## பொருளாதார கட்டமைப்பு சீரமைப்பு கொள்கைகளும், உடல்நலனும்

1. பொதுமக்களின் நலனுக்காக அரசு செய்யும் செலவினங்களைக் குறைப்பதும், அரசு சுகாதாரத் துறையை சுருக்குவதும்.

2. அரசு மருத்துவமனைகளில் புதிய சேவைக் கட்டணங்களை உருவாக்கி. ஏழை மக்களுக்கு மருத்துவ வசதி கிடைப்பதை கடினமாக்குவது.

3. அரசு மக்களின் உடல்நலத்தில் அக்கறை கொள்வதற்கு பதிலாக இதை தனியாருக்கு தருவது. தனியார் துறையோ நோய்க்கான சிகிச்சையில் மட்டுமே அக்கறை செலுத்தும். இதையொட்டி இந்திய அரசின் செலவு இத்துறையில் கணிசமாக குறைக்கப்பட்டது.

4. தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மக்கள் நலத்துறையில் சேவையளிக்க முன்வந்தாலும் சர்வதேச உதவி எத்துறையில் கொடுக்கப்படுகிறதோ அதேதுறையில் ஈடுபடுமாறு நிர்பந்திக்கப்படுகின்றன.

## ஆரம்ப சுகாதாரம் - அணுகுமுறை

1978ல் அல்மா அட்டா பிரகடனமானது 2000 ஆண்டிற்குள் அனைவருக்கும் ஆரம்ப சுகாதாரம் உறுதி செய்யப்படும் என அழுத்தமாக குறிப்பிடப்பட்டுள்ளது. இம்மாநாடு பல பரிந்துரைகளையும் முடிவுகளையும் எடுத்துள்ளது. அதில் முக்கியமாக மக்கள் நோய்வாய்ப் படுதலை குறைக்கவும் வாழ்க்கைத் தரம் உயர்த்தவும் பல நடைமுறைகளை அறிவுறுத்தியுள்ளது. ஆரம்ப சுகாதார திட்டங்கள் இன்னும் அவற்றின் இலக்குகளை நிறைவு செய்யவில்லை. முதலாவதாக ஆரம்ப சுகாதார மையங்களின் செயல்பாடு போதுமானதாக இல்லை. இரண்டாவதாக இந்த புதிய சீரமைப்பு திட்டங்கள் பொது சுகாதார சேவைகளை ஏழை மக்கள் அனுபவிக்க முடியாமல் அதற்கு ஏகப்பட்ட கட்டணங்களை விதிக்கின்றன.

உலக வங்கி மக்களின் உடல்நலத்தில் அத்துமீறி நுழைவதால் மகத்தான அல்மா ஆட்டா பிரகடனத்தின் நோக்கம் பலியிடப்பட்டது. எனவே உலக சுகாதார மையம் அரசியல் ரீதியாக தலையிட்டு அடிப்படை பிரச்சனைகளுக்கு முடிவு எடுக்கவில்லை என்றால் அதன் செயலே பொருத்தமற்றதாகிவிடும். அரசின் இலவச சுகாதாரச் சேவைக்குப் பதிலாக காப்பீட்டு வசதிகளை உலகவங்கி பரிந்துரைக்கிறது தனியார் காப்பீட்டு நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய கட்டணத் தொகையை வளரும் நாடுகளிலுள்ள சாதாரண ஏழை மக்களால் செலுத்த இயலாது. ஒரு சாதாரண ஏழைக்கு மருத்துவ வசதி இதன் மூலம் மறுக்கப்படுகிறது. நோய் உள்ளதோ இல்லையோ ஒருவர் இன்சூரன்ஸ் பாலிசியை வைத்துக்கொள்ள வேண்டும். அதற்கான பரிமியத்தை செலுத்த வேண்டும். ஆனால் பெருவாரியான தொழிலாளிகளுக்கு நிரந்தரமான வேலை இல்லை. பலருக்கு வருடத்தில் குறிப்பிட்ட காலம்தான் வேலை கிடைக்கும். எனவே இந்த காப்பீட்டு முறை அவர்களுக்கு பொருத்தமற்றது. வளர்ந்த நாடுகளில் அரசே சுகாதார திட்டம் வைத்துள்ளது. ஆனால் வளரும் நாடுகளில் அரசு தலையீடு கூடாது என உலகவங்கி கூறுகிறது.

## மருந்தகத் துறையில் காப்புரிமைச் சட்டம்

உலக வர்த்தக அமைப்பால் ஏற்படுத்தப் பட்டுள்ள வர்த்தகம் சார்ந்த அறிவு காப்புரிமை ஒப்பந்தம் மருந்து தயாரிக்கும் துறையில் ஒரு பெரிய தாக்கத்தை உருவாக்கும். இந்த ஒப்பந்தம் இத்துறையில் நமது சுயசார்பை அழித்துவிடும். 1970ல் உருவாக்கப்பட்ட இந்திய காப்புரிமை சட்டம் ஒரு முற்போக்கான சட்டம். இதனால் ஒரு மருந்துப் பொருளை செய்யக்கூடிய செயல்முறைக்குத்தான் காப்புரிமை உண்டே தவிர பொருளுக்கே காப்புரிமை கொடுக்க முடியாது. இதனால் உலகில் எங்கு ஒரு புதிய மருந்தினை கண்டுபிடித்தாலும் அதை வேறொரு முறையில் உள்நாட்டு தொழில்நுட்பம் மூலம் செய்து அதே மருந்தை தயாரிக்க முடியும். அதே நேரத்தில் இக்காப்புரிமையானது 7 முதல் 14 வருடம் வரைதான் தரப்படும். இந்தியாவில் நுண்ணியிர்களுக்கும். உயிரினங்களுக்கும் காப்புரிமை தரமுடியாது. மேலும் ஒரு புதிய மருந்துக்கு காப்புரிமை இந்தியாவில் கொடுக்கப் பட்டால் அது இங்கேயே தயாரிக்கப்பட வேண்டும். இச்சட்டத்தின் மூலமாக சீனா,

பிரேசில் போன்ற வளரும் நாடுகளுடன் நம் நாடும் சுயசார்பான நிலையில் இருக்க முடிகிறது. இவையெல்லாம் இச்சட்டத்தில் உள்ள நல்ல முக்கிய அம்சங்கள் ஆகும். 1970க்கு முன் வளர்ந்த நாடுகளில் உற்பத்தியாகிய மருந்துகள் 10 முதல் 15 ஆண்டுகளுக்குப் பிறகுதான் இந்தியாவிற்குள் கொண்டுவரப்பட்டது. ஆனால் இந்த காப்புரிமை சட்டம் இயற்றப்பட்டவுடன் 3 முதல் 5 வருடத்திற்குள் நமது பொதுத்துறை-தனியார்துறை மூலமும் புதிய மருந்துகள் தயாரிக்கப்பட்டன.

உலக வர்த்தக அமைப்பின் ஒப்பந்தத்தால் இந்திய காப்புரிமை சட்டம் மாற்றப்படும். செயல்முறைக்கு பதிலாக மருந்துக்கே (பொருளுக்கே) காப்புரிமை வழங்கப்படும். மேலும் காப்புரிமை 20 வருடங்களுக்கு நீடித்து வழங்கப்படும். இதனால் இத்துறையில் பன்னாட்டு நிறுவனங்களின் ஆதிக்கம் ஏற்படும். நமது சுயசார்பு அழிக்கப்படும். மருந்துகளின் விலை ஏறும். உடல்நலத்திற்கான செலவுகள் பயங்கரமாக கூடும். சீரமைப்பு திட்டத்தினால் ஏற்கனவே அரசில் பொதுநலனுக்கான செலவுகள் வெட்டிச் சுருக்கப்பட்ட நிலையில் ஏழை எளிய மக்களின் பெரும்பகுதியினருக்கு நல்வாழ்வு என்பது மறுக்கப்பட்டுவிடும்.

## மருந்து உற்பத்தி தொழிலின் வளர்ச்சி

இந்தியாவில் மருந்துகள் - மருந்து சார் தொழிலின் வருடாந்திர விற்பனை இப்போது ரூ.2000-கோடியாக உயர்ந்திருக்கிறது. பெரும்பாலான மருந்துகள். இந்நாட்டினுள்ளேயே தேசியத்துறை சார்ந்த கம்பெனிகளாலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. நம்நாடு மருத்துவத்துறை தொழில்நுட்ப நிபுணர்களை ஏராளமாக பெற்றிருக்கிறது. இத்தகைய முக்கியமான வளர்ச்சி 1958ல் பிரகடனம் செய்யப்பட்ட தொழிற்கொள்கையாலேயே சாத்தியமாயிற்று. இக்கொள்கையின் இலக்கு, தொழில்துறையில் சுயசார்பை அடைவது என்பதாகும். இதே ஆண்டில் உலக சுகாதார நிறுவனம் மற்றும் யூனிசெப் - அமைப்பின் உதவியோடு நாட்டின் முதல் ஆண்டிபயாடிக்ஸ் உற்பத்தி தொழிற்சாலையான ஹிந்துஸ்தான் ஆண்டிபயாடிக்ஸ் நிறுவனம் பிம்பிரி என்ற இடத்தில் பொதுத்துறையின் கீழ் நிறுவப்பட்டது. மேற்கத்திய வளர்ந்த நாடுகள் மருந்து உற்பத்திக்கான தொழில்நுட்பத்தை இந்தியாவுக்கு வழங்க மறுத்த அச்சூழலில் அப்போதைய சோவித் யூனியனை நம் நாடு அணுகியது. முன்னாள் சோவியத் யூனியன் உதவியுடன் இந்தியாவின் டிரக்ஸ் அண்டு பார்மச்சூட்டிகல்ஸ் லிமிடெட் துவங்கப்பட்டது. இன்றளவும் இந்தியாவின் மிகப்பெரிய மருந்து நிறுவனமாக ஐ.டி.பி.எல் (IDPL) விளங்குகிறது. இதற்கு முன்பு இந்தியாவில் மருந்துகளின் விலைகள், உலகத்திலேயே அதிகபட்ச விலைகளுள் ஒன்றாகும். பொதுத்துறை மருந்து தயாரிப்பு நிறுவனங்களின் வளர்ச்சிக்குப்பின் மருந்துகளின் விலைகள் குறையத் தொடங்கின. அந்நிய நாடுகளின் பன்னாட்டுக் கம்பெனிகளும் தங்களின் மருந்துகளின் விலைகளைக் குறைத்தாக வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாகின. மேலும் அவர்களின் உற்பத்திப் பிரிவுகளையும் இந்த நாட்டில் உருவாக்கி வளர்க்கத் தொடங்கினார்கள்.

இதற்கு முன்பெல்லாம் பன்னாட்டு மருந்து நிறுவனங்கள் மருந்து சந்தையில் ஏகபோக ஆதிக்கமும், கட்டுப்பாடும் செலுத்தி வந்தன. அவர்கள் எந்த மருந்துகளை எப்போது எந்த விலையில் விற்பனைக்கு விட வேண்டுமென்று தீர்மானிப்பது வழக்கம்.

## மருந்து ஆராய்ச்சி

சுதந்திரத்திற்கு முன்பு ஒரே ஒரு மருந்துதான் நம்நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டது. ஐ.டி.பி.எல் மற்றும் ஹெச்.ஏ.எல். (IDPL and HAL) ஆகிய இரு பொதுத்துறை நிறுவனங்களுமே புதிய மருந்துகளை உருவாக்கும் ஆய்வுக்களுக்கான வசதிகளைப் பெற்றிருந்தன. பிற்பாடு அரசாங்கம் மத்திய மருந்து ஆராய்ச்சி சாலையை (Central Drug Research Laboratory - CDRL) லக்னோவில் அமைத்தது. தேசிய இராசயண தொழில்நுட்ப நிறுவனத்தை (IICT) ஹைதராபாத்திலும் அரசே நிறுவியது.

இந்திய மருந்து கம்பெனிகள் மேற்கண்ட வழிமுறைகளில் மருந்துகளை உற்பத்தி செய்யத் தொடங்கின இதன் விளைவாக இந்திய மருந்து நிறுவனங்கள். உலகச் சந்தையில் அறிமுகப் படுத்தப்பட்ட எந்த புதிய மருந்தையும் அவற்றின் முதல் அறிமுகத்துக்குப்பின் மிகக்குறுகிய காலத்திற்குள் இங்கேயே தயாரிக்ககூடிய திறனைப் பெற்றன. மருந்துத் தொழிற்துறையில் நிலவிய சூழல் ஒரு பிரமிக்கத்தக்க மாறுதலுக்கு உள்ளாயிற்று. இந்திய மருந்து நிறுவனங்கள் பன்னாட்டு மருந்து நிறுவனங்களுடன் மிக வலிமையான முறையில் போட்டியிட்டன.

இது மட்டுமின்றி இந்திய மருந்து நிறுவனங்கள் பன்னாட்டு மருந்து நிறுவனங்களுடன் ஏற்றுமதியிலும் போட்டியிடுகின்றன. இந்திய மருந்து நிறுவனங்கள் Ibuprofen, Trimethoprim முதலான பல்வேறு மருந்துகளை மேற்குலகுக்கு ஏற்றுமதி செய்கின்றன. பல இந்திய மருந்து நிறுவனங்கள் தமது தயாரிப்பு - உற்பத்திச் சாலைகளை ஐரோப்பா, அமெரிக்கா உள்ளிட்ட இதர நாடுகளிலும் நிறுவியுள்ளன.

## மருந்துக் கொள்கை

நைரோபி-யில் 1985ஆம் ஆண்டு நடந்த உலக சுகாதார நிறுவனத்தின் உலக சுகாதார மாநாட்டில் எந்த ஒரு நாடும் அதனுடைய மக்களின் நல்வாழ்வுத் தேவைகளை ஒரு பொருத்தமான மருந்துக் கொள்கையைப் பின்பற்றாமல் நிறைவேற்ற முடியாது என்று பிரகடனம் செய்தது. இன்னும் முன்னதாக இந்திய அரசு மருந்துகள் மற்றும் மருந்தாக்க இயல் தொடர்பான ஒரு குழுவை "ஹாத்தி கமிட்டி" என்ற பெயரில் அமைத்திருந்தது. இக்குழுவின் அறிக்கையும், பரிந்துரைகளும் 1975ல் வெளியிடப்பட்டன. இதனுடைய பரிந்துரைகளில் சில உலக சுகாதார நிறுவனத்தின் பிரகடனத்தின் பகுதிகளாகவும் அமைந்திருக்கின்றன. இந்தக்குழு நாட்டில் மிக அதிகம் தேவைப்படுகிற 119 மருந்துகளின் பட்டியலைத் தயாரித்து இந்த மருந்துகளின் உற்பத்தியை உத்திரவாதப்படுத்த வேண்டுமென்று வழிகாட்டியுள்ளது. இந்தக்குழு எல்லா அந்நிய மருந்து நிறுவனங்களும் சிறிது காலத்திற்குப் பிறகு தேசிய மயமாக்கப்பட வேண்டுமென்றும், அதற்கு முன்னதாகவே அந்நியப் பங்குகள் இந்நிறுவனங்களில் படிப்படியாகக் குறைக்கப்பட வேண்டுமென்றும் பரிந்துரைத்திருக்கிறது.

அரசாங்கம் முதன்முதலில் 1986-ல் மருந்துக் கொள்கையை அறிவித்தது. இக்கொள்கை. ஹாத்தி கமிட்டியின் பரிந்துரைகளில் பலவற்றை பின்பற்றாவிட்டாலும். தேசிய மருந்து நிறுவனங்களின் வளர்ச்சிக்கு உதவ முயன்றது. பொதுத்துறை மருந்து நிறுவனங்களுக்கு சில பாதுகாப்புகளையும். இக்கொள்கை வழங்கியது, முதல் மருந்து விலைகள் கட்டுப்பாட்டு ஆணை. 1970ல் பிறப்பிக்கப்பட்ட பொழுது எல்லா மருந்துகளும் விலைகளும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருந்தன. அடுத்த ஆணை 1987ல் பிறப்பிக்கப்பட்ட பொழுது சற்றேறக்குறைய 387 மருந்துகள் விலைக்கட்டுப்பாட்டு ஆணைக்கு உட்பட்டிருந்தன.

## பன்னாட்டு மருந்துத் தொழில்

பன்னாட்டு மருந்து நிறுவனங்கள் இந்தியாவுக்கு வந்த போது மிகக்குறைந்த மூலதனத்துடன்தான் வந்தன. ஆனால் நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்களுக்கு சொத்துகளை இங்கு உருவாக்கிக் கொண்டன அந்த நிறுவனங்கள் அப்படியென்றும் உயர்ந்த பட்ச தொழில் நுணுக்கத்தை வழங்கிவிடவில்லை: ஆனால் அதற்குப்பதிலாக ஏராளமான அந்நியச் செலாவணித் தொகைகளை இலாபம் புனைவுரிமைத் தொகை. தொழில்நுட்ப வழிவகையறிவு என்ற பல்வேறு பெயர்களில் வாரிக்கொண்டு போயின. இந்தப் பன்னாட்டு நிறுவனங்கள் முதலில் பொதுத்துறை நிறுவனங்களைத் தகர்த்தெறிய முயன்றன. இப்போது அவை இலாபம் ஈட்டுவதற்காக அவற்றைப் பயன்படுத்திக் கொள்கின்றன.

பன்னாட்டு நிறுவனங்களின் சக்திமிக்க ஆதரவு திரட்டும் ' லாபி" முயற்சிகள் உலகத் தொழில் அமைப்புக்கு (WTO) காப்புரிமைப் பிரச்சனைகள் குறிப்பாக மருந்துகள் சார் காப்புரிமைகள் 'காட்" ஒப்பந்தத்தில் சேர்த்தாக வேண்டிய நிர்பந்தத்தை உண்டுபண்ணின இந்தப் பன்னாட்டு நிறுவனங்களின் பிரச்சாரத்தினால் அமெரிக்காவின் வர்த்தகத் தடைகள் இந்திய மருந்துக் கம்பெனிகட்கு எதிராக செயல்படுவதற்கு பயன்பட்டன. இந்தப் பிரச்சாரம் மேலும் ஒருபடி முன்னேறி - இந்தியாவுக்கு எதிராக உலக வர்த்தக அமைப்பிடம் காப்புரிமை ஒப்பந்தங்களை மீறுவது குறித்த புகார்களை பதிவு செய்யப் போவதாக மிரட்டுமளவுக்கும் சென்றது. அனேகமாக எல்லாப் பன்னாட்டு மருந்து நிறுவனங்களும் இப்போது தங்களின் மருந்து உற்பத்தி பிரிவுகளை மூடிவிட்டு சிறுதொழில் நிறுவனங்களைப் பயன்படுத்தி தங்களின் மருந்துகளை உற்பத்தி செய்கின்றன.

**வரலாறு திரும்ப திரும்ப போதிப்பது என்னவென்றால் மக்களை ஓரளவிற்கு மேல் ஒடுக்கமுடியாது. தற்போதைய ஏற்றத்தாழ்வுகள் மனித அறிவினை கூர்மையாக்கி போராட்டத்திற்கு தயார்படுத்துகிறது.**

- **இரா.மங்களபாண்டியன்**

# சொந்த மண்ணிலேயே அதன் மைந்தர்களை அகதிகளாக்கும் குடியுரிமை திருத்தச் சட்டம் / தேசிய குடிமக்கள் பதிவேடு அமலாக்கம் ஆகியவற்றை மத்திய அரசு திரும்பப் பெற

## தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்தல்

பெரும் கூச்சல், குழப்பம் மற்றும் எதிர்ப்புகளுக்கிடையே உள்துறை அமைச்சர் அமித்ஷா தாக்கல் செய்த குடியுரிமைச் சட்டம் (சீர்திருத்தம்) 2019 சட்ட முன்வரைவு நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டுள்ளது. எதிர்க்கட்சிகள் மட்டுமின்றி ஆளும் பாரதிய ஜனதாவுக்கு ஆதரவு அளிக்கும் சில கட்சிகளும்கூட இந்தச் சட்டத்திருத்ததை எதிர்த்துள்ள நிலையில் மத்திய ஆளும் கட்சியின் அடிமையாக செயல்படும் தமிழக ஆளும் அதிமுக உறுப்பினர்கள் இதை ஆதரித்து வாக்களித்துள்ளது கண்டனத்திற்குரியது. இந்தியாவை மதரீதியான வெறுப்பின்பால் பிளக்கிற சட்டமாக இது இருப்பதால் இந்தியா முழுவதிலும் பல மாநிலங்களில் மக்கள் தன்னெழுச்சியாக தெருவீதிகளில் இறங்கி இந்த சட்டத்திருத்தத்தை திரும்பப் பெறக்கோரி போராட ஆரம்பித்திருக்கிறார்கள்.

### ஏன் இந்த சட்டத்திருத்தம்?

*“இந்தியப் பிரிவினையின்போது இந்தியாவின் பல்வேறு நம்பிக்கைகளைக் கொண்டிருந்த லட்சக்கணக்கான மக்கள் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் தங்க நேர்ந்தது. அந்த மூன்று நாடுகளும் தங்களுக்கென்று அரசியலமைப்பை அமைத்து தங்களுக்கான அரசு, மதத்தை அங்கீகரித்துக் கொண்டதால் மேற்படி நாடுகளில் வாழும் இந்துக்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், பார்சிகள் மற்றும் கிறித்தவர்கள் மதரீதியாக துன்புறுத்தப்படுவதோடு, அந்த நாடுகளிலிருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். அதனால் அவர்களுக்கு இந்தியாவில் குடியுரிமை வழங்கவேண்டிய அவசியத்தின் அடிப்படையில் இந்த சட்ட முன்வடிவு கொண்டுவரப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது”.* மேலோட்டமாக படிப்பதற்கு இந்த சட்டத்திருத்தத்தின் நோக்கம் நேர்மறையாக தெரிந்தாலும் இதன் உள்ளீடுகள் பாரதிய ஜனதா கட்சி இந்தியாவை மதரீதியாக பிளக்கிற வேலையை ஆரம்பித்துவிட்டதையே பறைசாற்றுகின்றன.

### சட்டத்திருத்தத்தில் சத்தமில்லாமல் விடப்பட்டவை

இந்த சட்டத்திருத்தில் இந்தியப் பிரிவினையின்போது பல்வேறு காரணங்களுக்காக தங்கள் உறவினர்களைப் பிரிந்தும், சொத்துக்களை இழந்தும் பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் பகுதிகளில் தங்கிவிட நேர்ந்த இஸ்லாமியர்களின் நிலை என்ன என்ற கேள்விக்கும் பாகிஸ்தானில் மதரீதியாக துன்புறுத்தப்படும் போரா பிரிவு முஸ்லிம்களின் நிலை என்ன என்பன குறித்து விளக்கவில்லை.

குடியுரிமைச் சட்டத்தின் மூன்றாவது அட்டவணை (c) ஷரத்தில் உள்ள இயல்புரிமை அடிப்படையில் குடியுரிமைப் பெறுவதற்கு 12 ஆண்டுகள் தொடர்ச்சியாக இந்தியாவில் குடியிருந்திருக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு தொடர்ச்சியாக 12 ஆண்டுகள் என்பதிலிருந்து மொத்தமாக 5 ஆண்டுகள் என்று திருத்தம் கோரப்பட்டிருப்பது அரசின் உள்நோக்கத்தை வெளிக்கொணர்ந்துள்ளது.

சட்டத்திருத்தத்தில் பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய மூன்று நாடுகள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளன. அதில் ஆப்கானிஸ்தான் இந்தியாவிலிருந்து பிரிந்த நாடு அல்ல. இந்தியாவின் எல்லைகளை பகிர்ந்து கொள்ளும் நாடாகவும் அது இல்லை. ஆனால் சட்டத்திருத்தத்தில்

அது சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்திய எல்லைகளை பகிர்ந்து கொள்ளும் பர்மா, நேபாளம், பூடான் ஆகிய நாடுகள் சேர்க்கப்படவில்லை. இந்த சட்டத்திருத்ததில் பர்மாவை இணைத்துவிட்டால் அங்கிருந்து அகதிகளாக வந்துள்ள 40,000 ரோகிங்கியா இஸ்லாமிய அகதிகளுக்கு குடியுரிமை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை எழும் என்பதால் இதைத் தவிர்க்க பர்மா இணைக்கப்படவில்லை என்ற கூற்று இந்தச் சட்டத்திருத்தத்தின் உண்மை நோக்கத்தை அம்பலப்படுத்துவதாக உள்ளது.

பர்மாவைப்போல் கண்டுகொள்ளாமல் விடப்பட்டுள்ள இன்னொரு நாடு இலங்கை. இலங்கையில் அரசியல் மற்றும் இனரீதியான துன்புறுத்தல்களுக்கு ஆளாகி இந்தியாவில் அகதிகளாக குடியேறியுள்ளவர்கள் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. பர்மா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் அரசியல் மற்றும் இன ரீதியாக துன்புறுத்தல்களுக்கு ஆளாகி கொடுமைப்படுத்தப்பட்டு இந்தியாவில் அகதிகளாக குடியேறியுள்ள தமிழர்கள் மற்றும் இஸ்லாமியர்கள் நிலை குறித்து கேட்டால் அரசிடமிருந்து எந்த பதிலும் இல்லை. இலங்கைத் தமிழ் அகதிகள் இந்தியாவின் பழங்குடிகள் இல்லையா? குறிப்பிட்ட நாடுகளில் இருந்து வருபவர்களுக்கு மட்டும் குடியுரிமை வழங்கப்படும் என்பதும், பர்மா, இலங்கை போன்ற நாடுகளில் இருந்து வந்தவர்களுக்கு குடியுரிமை கிடையாது என்று சொல்வது இந்தியாவின் பன்முகக் கலாச்சாரத்தை அழிப்பது மட்டுமின்றி இந்திய அரசமைப்பு சட்டத்தின் உயரிய மற்றும் அடிப்படை விழுமியங்களான சமத்துவம், மதச்சார்பின்மை ஆகிய அடிப்படை நெறிமுறைகளை தகர்ப்பதாகவும் இந்துத்துவா என்ற ஒற்றைக் கலாச்சாரத்தை திணிக்கும் பாசிச நடவடிக்கையேயன்றி வேறென்ன? இந்த நடவடிக்கைகள் இந்து ராஷ்ட்டிரா என்பதை சட்ட ரீதியாக கட்டமைப்பதற்கான முன்னோட்டமே.

அசாம் ஒப்பந்தத்தை அமுலாக்கும்விதமாக உச்ச நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டு அதன் கண்காணிப்பில் மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோதமாக குடியேறியவர்களை வெளியேற்றும் நோக்கோடு தேசிய குடியுரிமை பதிவேடு தயார் செய்யப்பட்டது. உச்ச நீதிமன்றத்தின் நேரடி கண்காணிப்பில் நடைபெற்ற இந்த கணக்கெடுப்பிலேயே பல லட்சம் மக்களின் பெயர்கள் அவர்கள் போதிய ஆவணங்களை சமர்ப்பிக்கவில்லை என்று காரணம் காட்டி குடியுரிமைப் பதிவேட்டில் இருந்து நீக்கப்பட்டு குற்றவாளிகளாக்கப்பட்டு திறந்தவெளி சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் குடியுரிமை சட்டத்திருத்தத்தை நிறைவேற்றும் வகையில் தேசிய குடியுரிமைப் பதிவேட்டை நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படும் என்று உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆணவமாக கூறியுள்ளார். அப்படி தேசிய குடியுரிமைச் சட்டத்தில் பதிவு செய்ய போதிய ஆவணங்கள் இல்லை என்றால் நாமும்கூட அகதிகளாக ஆக்கப்படலாம். ஏனென்றால் அசாமில், கார்கில் போரில் பங்கேற்ற இந்திய ராணுவத்தின் உயர் அலுவலர், அசாம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. பக்ருதீன் அலி அகமது அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் ஆகியவர்களின் பெயர்கள்கூட விடுபடட்டுள்ளன. இவர்கள் அனைவரும் ஒரே சமூகத்தை சார்ந்தவர்கள் என்கிற செய்தி தற்செயலானதல்ல.

எனவே, சொந்த மண்ணிலேயே அதன் மைந்தர்களை அகதிகளாக்கும் ஒரு சட்டத்தை பர்மா மற்றும் இலங்கை அகதிகள் பற்றி மௌனம் காத்திருக்கும் குடியுரிமைச் சட்டத்திருத்தத்தை இந்தியாவின் பன்முக கலாச்சாரத்தை அழித்துவிட்டு இந்துத்துவா என்ற ஒற்றைக் கலாச்சாரத்தை திணிக்கப் பார்க்கும், இந்தியாவை மதரீதியான வெறுப்பின்பால் பிரிக்கப் பார்க்கும் ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளை எதிர்த்து குரலெழுப்புவோம் வாருங்கள். மதரீதியான அரசியலை வளர்த்தெடுக்க முயற்சிக்கும் அரசாங்கத்தையும், அதிகாரிகளையும், அரசியல்வாதிகளையும் வீட்டுக்கு அனுப்ப, குடியுரிமை திருத்தச் சட்டத்தை உடனடியாக திரும்பப் பெற நாடு முழுவதும் தன்னெழுச்சியாக வீதிகளில் இறங்கிப் போராடும் மக்களுடன் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கமும் இணைந்து இந்தியாவின் பன்முகத் தன்மையை நிலைநாட்டிட போராட்ட நடவடிக்கைகளில் அரசு ஊழியர்களும் ஈடுபட நேரிடும் என்பதை மத்திய ஆட்சியாளர்களுக்கு தெரிவிக்க விழைகிறோம்.

எனவே, குடியுரிமைச் சட்டத் திருத்ததை உடனடியாக இந்திய அரசு திரும்பப் பெற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

- மு.அ.

# வழிகாட்டியா? வழிப்போக்கரா?

சிலரைப் பார்த்தால் நமக்கு ஆச்சர்யமாக இருக்கும். 'ரெண்டு வருஷத்து முன்னாடி நாம கலாய்ச்சிக்கிட்டிருந்தவன் இன்னிக்கு பெரிய ஆளா ஆயிட்டான்பாரு' என்போம். கூட இருக்கும் நண்பர் 'எல்லாத்துக்கும் மச்சம் வேணும் மச்சி. அவனுக்கு மச்சம் இப்போ உச்சத்துல இருக்கு.' என்பார். கூட இருந்த ஒருவன் உயர்ந்த நிலைக்கு போவதோ, தலைவனாவதோ, பெரிய பொறுப்புகளில் அமர்வதோ அதிர்ஷ்டத்தால் நிகழ்வதாக நம்மில் பலபேரும் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் அந்த இடத்தை அடைவதற்கு அவர்கள் பட்ட கஷ்டங்களும் செய்த தியாகங்களும் விடாமுயற்சி களும் நமக்கு தெரிந்திருக்கவில்லை என்பதுதான் நிஜம். அவனுக்குள் ஏதோ ஒரு திறமை இருக்கு, அதனால்தான் அவன் மேலெழும்பி நிற்கிறான் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளவே சில ஆண்டுகள் தேவைப்படுகிறது. அவனுடைய திறமைகள் என்ன என்பது ஒவ்வொரு நெருக்கடியின்போது அவன் செயல்படும் விதத்திலிருந்து வெளிப்படும்.

தோழர்களே இந்த உலகத்தில் இரண்டு வகையான மனிதர்கள்தான் இருக்கிறார்கள். வழிகாட்டி நடத்திச் செல்பவர்கள், பின்பற்றிச் செல்பவர்கள். இதில் நாம் எந்தப்பிரிவில் இருக்க விரும்புகிறோம் என்பதைப் பொறுத்து நம்முடைய இடம் தீர்மானிக்கப்படும். இது நம்முடைய விருப்பம் மட்டும் சம்பந்தப்பட்டதல்ல. எண்ணம், ஆற்றல், உறுதி ஆகியவை தொடர்பானது. எல்லோருமே நெப்போலியன் போனபார்ட் டாகவோ, மகா அலெக்சாந்தராகவோ, மகாத்மா காந்தியாகவோ, தந்தை பெரியாராகவோ, அறிஞர் அண்ணாவாகவோ, கர்மவீரர் காமராஜராகவோ, விரும்புவதால் மட்டுமே ஆகிவிட முடியாது. அது நம்மிடமுள்ள ஆற்றலையும் அது எதற்கு மிகவும் ஏற்றது என்பதையும் பொறுத்தது ஆகும்.

கூட்டத்தில் கோவிந்தா போடுவதிலிருந்து விலகிச் சென்று பெயரைக் கெடுத்துக் கொள்ள நம்மில் வெகுசிலரே துணிவும் உறுதியும் கொண்டவர்களாக இருக்கிறோம் என்பதுதான் நிதர்சனம். நம்மில் பலபேருக்கு 'பின்பற்றிச் செல்' என்பதுதான் பத்திரமானதாகவும் சகஜமானதுமான வழியாக உள்ளது. நண்பர்கள் கூட்டத்தில் பிரபலமான ஒருவர் நகரில் ஓடும் ஒரு திரைப் படத்தை சிறந்த திரைப்படம் என்று சொல்வதாக வைத்துக்கொள்வோம். எல்லோரும் ஆமாம் என்பார்கள். அவர்களில் ஒருவர் அவ்வாறு கருதாவிட்டாலும் அவர் மறுத்துப் பேசமாட்டார். தன்னுடைய சொந்தக்கருத்தைப் புறக்கணித்து விட்டு பேசாமல் ஒத்துப்போய் விடுவதுதான் நல்லது என்று நினைப்பார். கும்பலோடு சேராத ஒருவராக அவர் இருக்க விரும்புவது இல்லை. இப்படி நான் சொல்வதற்காக அந்த திரைப்படத்தை மறுத்துக் கூற வேண்டும் என்று அர்த்தம் இல்லை. அப்படிக் கூறுபவர் அது ஏன் சிறந்த படமில்லை என்பதற்கான காரணத்தை எடுத்து வைக்க வேண்டும். அவர் அந்த திரைப்படத்தைக் காணும் கோணம் மற்றவர் களிடமிருந்து மாறுபட்டிருக்க வேண்டும். இந்த மாறுபட்ட அதே சமயம் ஆக்கபூர்வமான எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சிந்தனை தான் தலைமையிடத்துக்கு உயர்த்தும்.

தொழிற்சங்கம் போன்ற உறுப்பினர்கள் அதிகம் உள்ள இயக்கங்களில் ஒரு போராட்டமோ இயக்கமோ அல்லது முடிவுகளோ எடுப்பதற்கு ஒரு தலைமைக் குழு இருக்கிறது. நெருக்கடியான காலகட்டங்களில் பொறுப்பில் உள்ள நிர்வாகிகள் சேர்ந்து போராட்டத்தை திட்டமிடுகிறார்கள் தீர்மானிக்கிறார்கள். சில சமயங்களில் பெரும் பான்மை கருத்துக்கு எதிராக ஒரு சிலர் கருத்துக்கள் தெரிவித்திருக்கலாம். அவர்கள் எடுத்து வைத்த தர்க்கங்களும் சொன்ன கருத்து களும் போராட்டத்தின் முடிவுக்குப்பின்தான் வலிமையானவையா எதிர்மறையானவையா என்பதை உணர்வார்கள். போராட்டத்தில் வெற்றி தோல்விகள் இரண்டில் ஏதேனும் நடந்திருக்க லாம். ஆனால் போராடிய விதமும் போரட்டத்தை கைகொண்ட விதமும்தான் முக்கியமானவை. அதிலிருந்தே ஒருவரின் தலைமைப் பண்புகளும், இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லும் அவர் படைப்பு மனமும் உறுதியும் தெரியும்.

தொழிற்சங்கமாக இருக்கட்டும் அரசியல் கட்சியாக இருக்கட்டும். இவற்றின் வெற்றி களுக்கு முக்கிய காரணங்களாக இருப்பவை

வடித்தெடுத்த கொள்கைகளும் அவற்றை விட்டுவிடாத உறுதிப்பாடுகளும்தான். அறிஞர் லாயிட்ஸ் ஜார்ஜிடம் ஒருவர் கேட்டாராம் “உங்களுடைய பெருமைக்கு எதைக் காரணமாகக் கருதுகிறீர்கள்?'' என்று அதற்கு அவர் சொன்ன பதில் “நான் தலையை வாரிக்கொள்ளும்போது தலைவாருவதைத் தவிர வேறு எதைப்பற்றியும் நினைப்பது இல்லை.'' இதன் பொருள் என்ன. ஒரு செயலைச் செய்யும்போது ஒருமுகத் தன்மையும் ஒருமித்த செயல்பாடும் அவசியம் என்பதுதான். நெப்போலியன் போனபாட் சொல்கிறான், “உறுதியான தீர்மானம்தான் உண்மையான விவேகம்.'' ஒரு முடிவுக்கு வரமுடியாமை, உறுதியின்மை, நமது ஆற்றலில் நம்பிக்கையின்மை ஆகியவைத்தான் பேரழிவை ஏற்படுத்தக் கூடிய பலவீனங்கள்.

ஆங்கில இலக்கியத்தில் பேரும் புகழும் பெற்ற ஜான் மில்டன் இரண்டு கண்களையும் இழந்தவர். மிஸ் அமெரிக்காவாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஹீதர் ஒயிட் ஸ்டோன் காது கேளாதவர். இரண்டு கைகள் இரண்டு கால்கள் செயலிழந்த எரிக்மோம் தன்னுடைய வாயில் தூரிகையை வைத்துக் கொண்டு வரைந்த வாட்டர்கலர் சித்திரங்களினால் பல உலகப் பரிசுகளை வென்றவர். உலகின் மிகச் சிறந்த இசையமைப்பாளர் பீத்தோவன் இரண்டு காதுகளும் கேட்காதவர். கால்வின் ஸ்டான்லி என்ற 11 வயது சிறுவன் சைக்கிள் ஓட்டுகிறானாம், கூடைப்பந்து விளையாடுகிறானாம். அவனுடைய பள்ளிப் பாடங்களில் அவன்தான் முதல் ரேங்க் எடுக்கிறானாம், நீச்சல் போட்டியிலும் அவன் வயதுப் பிரிவில் அவனை வெல்ல ஆளில்லையாம். இதில் என்ன அதிசயம் என்றால் அந்தச் சிறுவன் இரண்டு கண்களையும் இழந்தவன். இதேபோல பல உதாரணங்களை நாம் சொல்லிக் கொண்டே போகலாம். இவர்களுக்கெல்லாம் சாதிக்கும் மனமும் ஆற்றலும் எங்கிருந்து வந்தது. உடற்குறைபாடுள்ள இவர்கள் “நம்மால் முடியாது'' என்று உட்கார்ந்து விட்டிருந்தால் இந்த சாதனைகளை நிகழ்த்தியிருக்க முடியுமா? இவர்களின் கடின உழைப்பும், விடா முயற்சியும், உறுதிப்பாடும்தான் நாம் இன்று இவர்களைப் பற்றி படிக்க வைத்திருக்கிறது.

வாழ்க்கை என்பது வருடும் தென்றலில் சுகமானது மட்டுமல்ல, மேடு பள்ளங்களும் கரடு முரடுகளும் நிரம்பியதுதான் என்றாலும் வெற்றிக் கனிகளை பறிக்க இந்த சவால்களை இன்முகத்துடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். மலையைக்கண்டு மலைத்து நிற்பவன் கோழை. அதில் படிக்கட்டுகள் அமைத்து அதன் சிகரத்தைத் தொடுபவனே செயல்வீரனாவான். “இவை எல்லாம் சாத்தியமா?'' என்ற கேள்வி எழுந்து கொண்டேதான் இருக்கும். “இது என்னால் சாத்தியம்'' என்ற நெஞ்சுறுதி படைத்தவர்கள் வெற்றி வரலாறுகளைப் படைக்கிறார்கள்.

இயக்கத்தில் உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற வேலையை மட்டும் செய்ய வேண்டும் என்று எண்ணாதீர்கள். அதை எப்படிச் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று சிந்தியுங்கள். இதைவிட சிறப்பாக வேறு யாரும் செய்யமுடியாத அளவுக்கு உங்கள் செயல் திட்டம் இருந்தால் நீங்கள் தனியாகத் தெரிவீர்கள். இயக்கத்தின் உயிர்த்துடிப்பாக மாறுவீர்கள்.

தோழரே, நீங்கள் இயக்கத்தின் வழிகாட்டியாக மாறப்போகிறீரா? அல்லது வழிப்போக்கராகவே இருந்துவிட்டுப் போய்விடப் போகிறீரா? இப்போதே முடிவு செய்யுங்கள்!


**- ஜிஜி**

## வாசகர் கடிதம்

*டிசம்பர் மாத முன் அட்டைப் படம் அரசு ஊழியர்களுக்கு எதிராக நடைபெறும் அரசின் அடக்குமுறையை எதிர்க்கும் போர்க்களம் போன்ற தோற்றத்தை ஏற்படுத்தியது. சாமானியர்கள் மீது நடத்தப்படும் சரமாரி தாக்குதல், இன்னா செய்தாரை ஒறுத்தல், தமிழகம் முழுவதும் நடைபெற்ற மக்கள் சந்திப்பு இயக்கம், நீதித்துறையில் புதிய நம்பிக்கை, அமேசான் காடு, தனியார்மயமாகும் வருவாய்த் துறை, ஜனவரி 8 அகில இந்திய வேலைநிறுத்தம், நன்னடைத்தை விதி, மார்க்சின் நினைவு தினம் ஆகிய அனைத்து கட்டுரைகள் மற்றும் பொதுவாக அனைவரும் அறிந்து கொள்ள வேண்டிய 'தெரிந்து கொள்வோம்' செய்தி என அனைத்தும் சிறப்பாக இருந்தது. மொத்தத்தில் டிசம்பர் மாத இதழில் இடம்பெற்ற அனைத்து கட்டுரைகளும் பல செய்திகளை பறை சாற்றின. இதேபோல் தொடர்ந்து வெளியிட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.*

***- ரா.தட்சிணாமூர்த்தி***

# சட்டம் ஒழுங்குப் பிரச்சனை இனி இல்லை!



கவிக்கோ அப்துல் ரகுமான்

தப்பு செய்தவன் புத்திசாலி அதை தட்டிக்கேட்டவன் குற்றவாளி என்று ஒரு திரைப்பாடலை நாம் கேட்டிருப்போம். நாட்டில் நடக்கும் நிகழ்வுகள் இன்று அப்படித்தான் இருக்கிறது. ஐஏஎஸ், ஐபிஎஸ், நீதிபதிகளுக்கு கொடுத்த ஊதிய மாற்ற நிலுவையை அரசு ஊழியர்களுக்கும் கொடு என்று கேட்டு போராடினால் சிறை, ஸ்டெர்லைட், ஹைட்ரோ கார்பன் திட்டங்களை தமிழகத்தில் அமல்படுத்தாதே என்றால் போராடியவர்கள் மீது துப்பாக்கிச்சூடு. சிறை, மாணவர் போராடினால் வழக்கு, பெண்கள் போராடினால் சிறைபிடிப்பு. ஆனால் ஊழல் செய்தவர்கள் நாட்டில் உலா வருகிறார்கள். கடன் வாங்கியவர்கள் கம்பி நீட்டுகிறார்கள். குட்கா தொழிற்சாலை நடத்தியவர்கள் மாண்புமிகுக்களாக பல்லிளிக்கிறார்கள். எதிர்த்துக் கேட்பவர்களையும் போராடுபவர்களையும் சிறைக்குள் போட்டுவிட்டால் சட்டம் ஒழுங்கு பிரச்னைக்கு இடமேது? இந்த நாட்டின் நிலைமையை அன்றே அழகான கவியாய் சொல்லியிருக்கிறார் கவிக்கோ அப்துல்ரகுமான். 'பாருக்குள்ளே நல்ல நாடு' என்ற தலைப்பில் 1987ல் அவர் எழுதிய கவிதை அப்போதைவிட இப்போதுதான் இன்னும் உயிர்ப்பாய் இருக்கிறது இதைப் படியுங்கள்.

அவர்களைச் சிறையில் சந்தித்தேன்
“என்ன குற்றம் செய்தீர்கள்?'' என்று கேட்டேன்.

ஒவ்வொருவராய்ச் சொன்னார்கள்

“எங்கள் வீட்டில் திருடிக்கொண்டு
ஒருவன் ஓடினான். ‘திருடன், திருடன்’
என்று கத்தினேன். அமைதிக்குப்
பங்கம் விளைவித்தாக என்னைக்
கைது செய்து விட்டார்கள்!''

“என் வருமானத்தைக் கேட்டார்கள்
நான் வேலையில்லாப் பட்டதாரி என்றேன்.
வருமானத்தை மறைத்தாக
வழக்குப் போட்டுவிட்டார்கள்!''

“நான் கரிமூட்டை தூக்கும் கூலி.
கூலியாகக் கிடைத்த ரூபாய் நோட்டு
கரி பட்டுக் கறுப்பாகிவிட்டது. கறுப்புப்பணம்
வைத்திருந்ததாக கைது செய்துவிட்டார்கள்!''

“என் வயலுக்கு வரப்பெடுத்துக் கொண்டிருந்தேன்
‘பிரிவினைவாதி’ என்று பிடித்துக்கொண்டு
வந்துவிட்டார்கள்!''

“அலிபாபாவும் நாற்பது திருடர்களும் படச்
சுவரொட்டியை ஒட்டிக்கொண்டிருந்தேன்
சட்டமன்ற உறுப்பினர்களை அவதூறு
செய்ததாக அழைத்துக்கொண்டு
வந்துவிட்டார்கள்!''

“ஊழல் பேர்வழிகளை நாடுகடத்த வேண்டும்
என்று எழுதினேன். கடத்தல்காரன் என்று
கைது செய்து விட்டார்கள்.!''

“நான் பத்திரிகை ஆசிரியன். தலையங்கத்தில்
உண்மையை எழுதினேன். நாட்டின்
ஸ்திரத் தன்மையை குலைத்ததாகக்
கொண்டுவந்து விட்டார்கள்!''

“சுதந்திர தின விழாவில் ‘ஜன கன மன’
பாடிக்கொண்டிருந்தார்கள். நான்
பசியால் சுருண்டு படுத்துக்கொண்டிருந்தேன்.
எழுந்து நிற்க முடியவில்லை. தேசிய கீதத்தை
அவமதித்தாக சிறையில் அடைத்து விட்டார்கள்!''

நான் வெளியே வந்தேன்
சட்டம் ஒழுங்குப் பிரச்சினை எதுவும்
இல்லாமல் நாடு அமைதியாக இருந்தது!

**- கவிக்கோ அப்துல் ரகுமான்**

“மனோஹரி”

# ஜனவரி எட்டில் நடந்தது ஜனங்களுக்கான வேலைநிறுத்தம்!



எண்பது லட்சம் மாநில அரசு ஊழியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் ஜனவரி 8ல் நடைபெற்ற அகில இந்திய வேலைநிறுத்தப் போராட்டத்தில் பங்கேற்க லட்சக் கணக்கான மாநில அரசு ஊழியர்களுக்கு அறைகூவல் விடுத்தது. இவ்வமைப்பில் இணைந்துள்ள தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கமும் அதன் தலைமையில் இயங்கும் தமிழ்நாடு அரசு அனைத்துத் துறை ஊழியர் சங்கங்களின் போராட்டக் குழுவும் இவ்வேலை நிறுத்தப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளன.

"நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்" என்றார் வள்ளுவர். தீர்க்கப்படாமல் பெருகிவரும் பிரச்சனைகளான காலியிடங்களை நிரப்பாமை, ஆட்குறைப்பு நடவடிக்கையைக் கைவிடல், அவுட்சோர்சிங் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் அத்துக் கூலிக்குப் பணியமர்த்தி உழைப்பைச் சுரண்டும் ஊழியர் விரோத பணியமர்வுக் கலாச்சாரத்தைக் கைவிடல், குறைந்தபட்சம் ரூபாய் 18000 மாத ஊதியத்தை கேரள மாநில இடது ஜனநாயக முன்னணி அரசைப் போல் இந்திய நாடு முழுவதும் அமுல்படுத்துவது, பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து பயனளிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தை அமுல்படுத்துதல் உள்ளிட்ட கோரிக்கைகளுக்காக பெரும்பான்மையான மாநிலங்களில் மாநில அரசு ஊழியர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

இத்தகைய அவலங்களுக்குக் காரணமான மத்திய மாநில அரசுகளின் மக்கள் விரோத தொழிலாளர் விரோத கொள்கைகளுக்கு எதிராக ஆண்டுதோறும் அகில இந்திய வேலை நிறுத்தங்கள் நடைபெற்று வருகின்றன. அதனடிப்படையில் 2019 ஜனவரியில் நடைபெற்ற இரண்டு நாள் வேலைநிறுத்தப் போராட்டத் திற்குப் பின்பும் மத்திய மாநில அரசுகளின் போக்கில் எவ்வித மாற்றமும் நிகழவில்லை.

மாறாக வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் விதமாக மக்கள் விரோத கொள்கைகளைத் தீவிரமாக செயல்படுத்தி வருகிறது மத்திய அரசு.

மாநில அரசு ஊழியர்களுக்குக் குறைந்தபட்சம் ரூ.18000 ஊதியம் வழங்க வேண்டும் என்னும் கோரிக்கையை நிறைவேற்றிய கேரள மாநில அரசை வியந்து நோக்கும் அதே வேளையில் தமிழ் நாட்டில் தின,வார,மாதக் கூலியென அத்துக் கூலி கொடுத்து உழைப்பைச் சுரண்டி வரும் தமிழக அரசின் அக்கறையற்ற தன்மையைக் குறிப்பிட்ட வேண்டியுள்ளது. வரையறுக்கப் படாத காலமுறை ஊதியம் என்ற தேன்தடவிய பெயரால் ஊராட்சி செயலர்கள், சத்துணவு ஊழியர்கள், வருவாய் கிராம ஊழியர்கள் என பல்லாயிரக் கணக்கான ஊழியர்களை ஏமாற்றி வருகிறது தமிழக அரசு.

ஏற்கனவே தேசம் முழுவதும் பற்றி எரியும் பிரச்சினையான புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்திடப் போராடியதன் விளைவாக தமிழ் நாட்டில் தமிழக அரசு நியமித்த குழு ஆண்டுக் கணக்கில் நீடிக்கப்பட்டு குழுவின் அறிக்கை கிடைக்கப் பெற்றும் கிணற்றில் போட்ட கல்லாகவே உள்ளது. பல்லாயிரக்கணக்கான அரசு ஊழியர் ஆசிரியர்களிடம் மாதந்தோறும் அடிப்படை ஊதியத்தில் 16 ஆண்டுகளாகப் பிடித்தம் செய்யப்பட்டு வரும் பல்லாயிரம் கோடி பணத்திற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. இடையில் இறந்துபோன, பணி நிறைவு பெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு

செலுத்திய பணமும் கிடைக்கவில்லை. ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியமும் இல்லை.

மத்தியில் பா.ஜ.க. ஆட்சிப் பொறுப்பேற்ற 2014 முதல் ஐந்தாண்டுகளில் உழைக்கும் வர்க்கம் எதிர்கொண்ட துன்ப துயரங்கள் சொல்லி மாளாது. பணமதிப்பிழப்பு, சரக்கு மற்றும் சேவை வரியின் கோரத் தாண்டவத்தால் நூற்றுக்கும் மேற்பட்ட உயிர்களை பலி கொடுத்தோம். ஆண்டுக்கு இரண்டு கோடிப் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்குவதாகக் கூறிய மத்திய ஆட்சியாளர்கள் 45 ஆண்டுகளில் தேசம் சந்தித்திராத வேலையின்மைச் சூழலை உருவாக்கினார்கள். விவசாயிகளின் வாழ்க்கையை வழிமறித்த மத்திய மாநில அரசுகளின் பொருளாதார வேளாண்மைக் கொள்கைகளால் நாடு முழுவதும் போராட்டங்கள் நடைபெற்றன. விவசாயிகள் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் பெற்ற கடனைத் தள்ளுபடி செய்யத் தயாரில்லாத மத்திய அரசு கார்ப்பரேட் நிறுவனங்களுக்குப் பல்லாயிரம் கோடிப் பணமதிப்பிலான கடன்களை வராக்கடன்களாக பாவித்துக் தள்ளுபடி செய்தது. சகல பகுதி உழைக்கும் மக்களின் அரசுக்கு எதிரான எழுச்சியை 2019 ஜனவரி 7, 8 தேதிகளில் நடைபெற்ற அகில இந்திய வேலைநிறுத்தப் போரில் காண முடிந்தது. எனினும் மத்திய மாநில அரசுகள் தங்களின் கொள்கைகளில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை.

இந்நிலையில்தான் 2019 ஏப்ரல் - மே திங்களில் 15ஆம் மக்களவைக்கான தேர்தல் நடைபெற்றது. மீண்டும் மக்கள் விரோத அரசு மத்தியில் அசுர பலத்துடன் ஆட்சிப் பொறுப்பேற்றது. இது தமது ஐந்தாண்டு கால செயல்பாடுகளுக்கு மக்கள் அளித்த அங்கீகாரமாகக் கருதிக் கொண்டது மத்திய பா.ஜ.க. அரசு.

இரண்டாவது முறையாக பொறுப்பேற்ற மத்திய அரசு மக்கள் விரோத பொருளாதாரக் கொள்கைகளோடு நிறுத்திக் கொள்ளாமல் தங்களது நிகழ்ச்சி நிரலான ஒரே தேசம், ஒரே மதம், ஒரே மொழி, ஒரே கலாச்சாரம், ஒரே ரேஷன் கார்டு, ஒரே கட்சி, ஒரே ஆட்சி என முனைப்புக் காட்டி வருகிறது. வரலாறு காணாத பொருளாதார மந்தம், வாங்கும் சக்தி வீழ்ச்சி, ஆலைகள் மூடல், வேலை இழப்பு என சங்கிலித் தொடராய் அணிவகுக்கும் அவலங்களை எதிர்த்துப் போராட இந்தியத் தொழிலாளி வர்க்கம் 2020 ஜனவரி 8 வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு அறைகூவல் விடுத்தது. இப் போராட்டத்தைத் திசை திருப்பும் விதத்தில் குடியுரிமை திருத்தச் சட்டம் தானடித்த மூப்பாக நிறைவேற்றப் பட்டது. தேசிய மக்கள் பதிவேடு எனும் விஷம் தோய்ந்த கத்தியும் தலைமீது தொங்கவிடப் பட்டுள்ளது. இதனை எதிர்த்து இந்தியாவில் மாண்புமிகு மாணவர்கள் நடத்திய போர்த் தீ அனைத்து மனிதநேய விரும்பிகளாலும் விரிவு படுத்தப்பட்டு உக்கிரமான போர் நடைபெற்று வருகிறது.

மத்திய அரசின் தொழிலாளர் விரோத ஊழியர் விரோத 'அமர்த்து துரத்து' கொள்கைக் கெதிராகவும், இலாபமீட்டும் பொதுத்துறை நிறுவனங்களை அடிமாட்டு விலைக்குத் தாரைவார்க்கும் தனியார்மய, தாராளமய, உலகமயக் கொள்கைகளுக்கெதிராகவும், வரலாறு காணாத எதிர்ப்பு உருவாகியுள்ளது.

தமிழ்நாட்டில் மத்திய அரசின் தொழிலாளர் விரோத கொள்கையை அடியொற்றி அரசுத் துறைகளில் இனி அனைத்துப் பணியிடங்களையும் வெட்டிச் சுருக்கி தேவையான முக்கியத்துவம் வாய்ந்த பணியிடங்களை மட்டும் வைத்துக் கொண்டு அவற்றையும் அவுட்சோர்சிங் மூலம் கார்ப்பரேட் மயப்படுத்தும் நடவடிக்கைக்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்தகைய கொடுமைகளுக்கு எதிராக மாநில அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஜாக்டோ ஜியோவின் மூலம் ஒன்றுபட்டுப் போராடிய போது சிறை வைப்பு, வழக்கு, பணியிடை நீக்கம், பணிநீக்கம், ஒழுங்கு நடவடிக்கைகள் என மாநில அரசு தன் கோர முகத்தைக் காட்டியது. இவை இன்றளவும் சரி செய்யப் படாமல் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் நீருபூத்த நெருப்பாய் காலம் நோக்கிக் காத்திருக்கின்றனர். இந்தியா முழுவதிலும் உள்ள உழைக்கும் மக்கள் மற்றும் தொழிற்சங்கத்தினர் சேர்ந்து நடத்தியுள்ள இந்த வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு நாடு முழுவதும் ஆதரவு காணப்பட்டது. எதிர்க்கட்சிகள் அனைத்தும் உழைக்கும் மக்களுக்கு ஆதரவாக இருந்தனர். இவ்வளவு பெரிய போராட்டம் மத்திய அரசுக்கு மனமாற்றத்தை ஏற்படுத்தினால் நல்லது. ஏற்படுத்துமா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

**- பெரணமல்லூர் சேகரன்**

*(கட்டுரையாளர் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்க முன்னாள் மாநிலப் பொதுச் செயலாளர்)*

# மாற்றத்தை நோக்கி
# மகளிர் துணைக்குழு

**"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கியிவ் வையந் தழைக்குமாம்"**

- ***மகாகவி பாரதி***

காலம் காலமாக அரசு ஊழியர்களாக அனைத்து துறைகளிலும் பணியாற்றக்கூடிய பெண்களுக்கு என்று தனி அமைப்பு எதுவும் இல்லாத அக்காலச் சூழலில் முற்போக்கு சித்தாந்தத்துடன் செயல்படக்கூடிய தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தனது போராட்ட பாதையின் ஒரு பகுதியாக பெண் அரசு ஊழியர்களை அணி திரட்டுவது, அவர்களுக்கு பயிற்சி அளிப்பது, அவர்களை ஸ்தாபன ரீதியாக அரசியல் படுத்துவது, சங்க நிர்வாகப் பொறுப்புகளில் பங்கேற்க வைப்பது தலைவர்களாக வார்த்தெடுப்பது என முடிவு செய்து தமிழக அரசு ஊழியர் இயக்க வரலாற்றில் முன் எப்போதுமில்லாத நிகழ்வாக கடலூரில் நடைபெற்ற அரசு ஊழியர் சங்கத்தின் ஐந்தாவது மாநில மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவின்படி மாநில அளவில் மகளிர் துணைக்குழு உருவாக்கப்பட்டு, பின்னர் மாவட்ட மகளிர் துணைக்குழு, வட்டக்கிளை மகளிர் துணைக்குழு என விரிவடைந்துள்ளது. தஞ்சையில் நடைபெற்ற 13ஆம் மாநில மாநாட்டினை தொடர்ந்து கடந்த 15.12.2019 அன்று நடைபெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழு முடிவின் அடிப்படையில், மாநில செயலாளர் தோழர் சி.பரமேஸ்வரியை அமைப்பாளராக கொண்டு தோழர்கள் தெ.வாசுகி (மாநிலச் செயலாளர்), கோ.பழனியம்மாள் (மாநில துணைத் தலைவர்), ப.சுந்தரம்மாள் (வடசென்னை), ச.செல்வி (தஞ்சாவூர்), உ.சுமதி (தென்சென்னை), ஏ.ஆர்.ஆஸரா (நீலகிரி), பி.எஸ்.இளவேனில் (தருமபுரி), பி.ராணி (நாகபட்டினம்), எம்.செல்வராணி (கரூர்) மற்றும் ஆ.அமுதா (மதுரை) உள்ளிட்ட பதினோரு உறுப்பினர்களைக் கொண்ட மாநில மகளிர் துணைக் குழுவினை அமைத்துள்ளது. உழைக்கும் பெண்களின் உரிமைகளை அனைத்து மகளிரும் அறியும் விதமாகவும் ஆண், பெண் இருபாலரும் பணிபுரியும் அலுவலகங்களில் சமத்துவத்தை பேணவும், சர்வதேச அளவில் பெண்கள் போராடி பெற்ற உரிமைகளை அவர்களுக்கு எடுத்துரைக்கும் விதமாக உழைக்கும் பெண்களுக்கான விழிப்புணர்வாக நமது ஸ்தாபனம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8 சர்வதேச மகளிர் தினத்தினை கொண்டாடி வருகிறது.

இந்தியாவில் முன் எப்போதுமில்லாத அளவுக்கு பாலியல் குற்றங்கள், பெண்கள் மீதான வன்முறைகள் பெருமளவில் அதிகரித்துள்ளது. பெண்கள் வாழ தகுதியற்ற நாடாக இந்தியா உள்ளதாக இங்கிலாந்தின் ராய்டர்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது. சட்டத்தின் முன் அனைவரும் சமமென அரசியல் சாசனம் கூறுகிறது. ஆனால் சனாதனக் கொள்கைகளை தாங்கிப் பிடிக்கும் மோடி அரசில் பெண்களுக்கான பாதுகாப்பின்மை என்பது மிகப்பெரிய அச்சத்தை விளைவிக்கிறது. பிறந்த பெண் குழந்தை முதல் வயதான பெண்மணிகள் வரை வயது வித்தியாசமில்லாமல் பாலியல் ரீதியாக துன்புறுத்துவது, கூட்டுப் பாலியல் வன்புணர்வு, கொடூரமாக தாக்கி கொலை செய்வது என பெண்கள் மீதான வன்முறைகள் அன்றாடம் நடக்கிற நிகழ்வாக உள்ளது. இந்தியாவில் பெண்கள் அனைத்து துறைகளிலும் தடம் பதித்து முன்னேறி வரும் சூழலில் பிற்போக்கு சிந்தனைகள் கொண்ட பாசிச அரசாக சனாதனக் கொள்கைகளை தாங்கிப் பிடிக்கும் அரசாக மோடி அரசும் அதற்கு அடிவருடியாக இருக்கும் தமிழக அரசும் பெண்களை மீண்டும் வீட்டுக்குள்ளேயே பூட்டி வைக்கக் கூடிய, அவர்களை அடுப்பங்கரையில் முடக்கக் கூடிய வேலைகளை சத்தமின்றி செய்து வருகிறது.

இந்தியாவில் அனைத்து அரசு / தனியார் அலுவலகங்களிலும் பணிபுரியக்கூடிய பெண்களுக்கென விசாகா கமிட்டி என்கிற பெண்கள் மீதான பாலியல் ரீதியாக அச்சுறுத்தல்களை களைவதற்கான கமிட்டி உள்ளது. ஆனால் தமிழகத்தில் அப்படி ஒரு கமிட்டி தாங்கள் பணிபுரியும் அரசு அலுவலகத்தில் இருப்பதே நிறைய பெண்களுக்கு தெரியாது என்பதுதான் உச்சபட்ச கொடுமை. அப்படியே ஒன்றிரண்டு பாலியல் ரீதியான துன்புறுத்தலுக்கு ஆளான பெண்கள் புகார் தெரிவிக்கும் பட்சத்தில்

அப்பெண்ணின் மீதே களங்கம் விளைவிக்கக் கூடிய போக்கினாலும், பணி ஓய்வு பெறும் வரை அதே துறையில் பணிபுரிய வேண்டுமே என்ற அச்சத்தினாலும், குடும்ப சூழல் காரணமாகவும் அரசு அலுவலகங்களில் பணிபுரியும் பெண்கள் தங்களது உயர் அலுவலர்களால் படும் துன்பங் களை தனது சக தோழிகளிடம் கூட பகிர்ந்து கொள்ள முடியாத அவல நிலை உள்ளது. இதை களைவதற்காகத்தான் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில, மாவட்ட, வட்டக் கிளை மகளிர் துணைக் குழுக்கள் அரசு அலுவலகங்களில் பணிபுரியும் பெண்களுக் கெதிரான பாலியல் துன்புறுத்தல்கள், பணியில் ஏற்படும் அச்சுறுத் தல்களை களைவதோடு, அவர்களின் உழைப்புச் சுரண்டல்களுக்கு எதிராகவும் பணிபுரியும் சக தோழிகளை அரவணைக்கக்கூடியவர்களாகவும், மட்டு மல்லாமல் அரசு ஊழியர்களின் பறிக்கப் பட்ட உரிமைகளை மீட்கவும், பெற்ற உரிமை களை காக்கவும் போராட்ட களத்தில் களமிறக்க வும் ஸ்தாபன ரீதியாக அரசியல்படுத்தவும் உழைக்கும் வர்க்கத்தின் போராளிகளாகவும் பெண்களை அணிதிரட்டுகிறது.

ஓர் உழைக்கும் பெண் ஓர் உழைக்கும் ஆணுக்கு சமமாக சட்டத்தில் மட்டுமல்ல நடைமுறையிலும் இருக்க வேண்டும். அதற்கு உழைக்கும் பெண்கள் ஸ்தாபன போராட்டங் களில் அதிகளவில் பங்கேற்க வேண்டும். பெண்கள் முழுச் சுதந்திரம் பெறாமல் உழைக்கும் வர்க்கத்திற்கு ஒருபோதும் முழுமையான வெற்றி கிடையாது. மேலும் பெண்கள் எப்போதும் போல ஆண், பெண் சமத்துவத்திற்காக மட்டும் போராடாமல் இன்றைய இந்தியாவில் பெரு முதலாளித்துவ சுரண்டல்களுக்கெதிராகவும், பெண்கள் பெண் குழந்தைகள் மீதான வன்முறை களுக்கெதிராகவும், இந்தியாவை இன, மத, மொழி வாரியாக கூறுபோடும் பாசிச அரசின் சமூக அநீதிகளுக்கு எதிராகவும், சமத்துவத்திற் காகவும் களமிறங்கி போராடக்கூடிய சமூக மாற்றத்தை நோக்கி மகளிர் துணைக்குழு பயணிக்கும் என்பது திண்ணம்.

- **தெ.வாசுகி**

# அறிந்து கொள்வோம்

பெண்கள் சமூக நிலையில் உலகில் இந்தியா - 112ஆம் இடம்

முதல் இடம் - ஐஸ்லாந்து

2வது இடம் - நார்வே

3ஆம் இடம் - பின்லாந்து

உலகில் உள்ள நாடாளுமன்றங்களில் எம்.பி.க்களின் எண்ணிக்கை - 35127

25 சதவீதம் மட்டுமே பெண்கள் இடம் பெற்றுள்ளனர்.

பெண்கல்வி முதல் மாநிலம் - கேரளா

இந்தியாவில் 867 பல்கலைக்கழகங்கள் உள்ளன.

அதிக பல்கலைக்கழகம் உள்ள மாநிலம் - ராஜஸ்தான்

நிகர்நிலை பல்கலைக்கழகங்கள் அதிகம் உள்ள மாநிலம் - தமிழ்நாடு (28)

மோடி வெளிநாட்டு பயண செலவு

கடந்த 5 ஆண்டுகளில் - 4400 கோடி

2வது ஆட்சியில் 5 மாதங்களில் - 443 கோடி

உள்நாட்டு பயண செலவு - தனி

நாடு முழுவதும் 72 ஆயிரம் மருத்துவமனைகளில் கழிப்பறை இல்லை (சுகாதார அமைச்சம் தகவல்)

கிராமங்களில் 28.7 சதவீதம் கழிப்பிட வசதி இல்லை

ஆசியாவிலேயே நீர் தனியார்மய மாநகராட்சி - கோவை

தென்னாப்பிரிக்கா நிறுவனம் - கோவை மாநகராட்சியில் குடிநீர் வழங்க சூயஸ் என்ற பெயரில் 90 ஆண்டு ஒப்பந்தம்

உலகில் நீர் உரிமைக்கு சட்டம் இயற்றிய நாடு - உருகுவே (2004 அக்டோபர் 31)

உலகில் மிக அதிகமாக மருந்து விற்பனை ஆகும் நாடுகளில் இந்தியா - 10வது இடம்

38 சர்வதேச புகாரில் 13 புகார் இந்தியாவில் விற்கப்படும் மருந்து

50 மருந்து நிறுவனங்களுக்கு - மருந்து ஆய்வாளர்

200 மருந்து கடைகளுக்கு - மருந்து ஆய்வாளர் இருக்க வேண்டும்.

- **ஏ.எஸ்.**

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A.SELVAM. Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com